கருநாடக அரசு

செம்மொழித் தமிழ்

முதல் மொழி

பத்தாம் வகுப்பு

@KTBS
NOT TO BE REPUBLISHED

10

Tamil - First Language

Part-2

KARNATAKA TEXT BOOK SOCIETY (R.)
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

பொருளடக்கம்

I9U8J3

வ. எண்	தலைப்பு	பக்கம்
	1. செய்யுள்	
I.	இறைவாழ்த்து	
	1) மொழி வாழ்த்து	1
	2) நாட்டு வாழ்த்து	4
II.	அறவுரை	
	1) பழமொழி நானூறு	5
	2) சிறுபஞ்சமூலம்	9
III.	தொடர் நிலைச் செய்யுள் :	
	1) இளையான் குடிமாற நாயனார் புராணம்	11
IV.	சங்க இலக்கியம் :	
	1) புறநானூறு	23
V.	பல்சுவை :	
	1) கதிரை மலைப்பள்ளு	25
	2) பெண்கள் விடுதலைக்கும்மி	27
	3) என் மக்கள்	29

@KTBS NOT TO BE REPUBLISHED

வ. எண்	தலைப்பு	பக்கம்
VI.	1. மறுமலர்ச்சிக்கவிதைகள்	
	1) இன்றைய களாவும் நாளைய பலாவும்	32
	2) இயல்பு	35
	2. உரைநடை	
6.	மனம் அவாவும் இலங்காவி - பேராசிரியை. முனைவர் - அ. சங்கரி	39
7.	ஒரு செய்தி - கி. ராஜ் நாராயணன்	47
8.	பம்பன்-பேராசிரியர்தண்.கி.வேங்கடாசலம்	55
9.	தமிழில் விடுகதைகள் - பேராசிரியர். -முனைவர் ச.வே. சுப்பிரமணியனார்.	62
10.	கண்ணகி கோயில் செய்த சேரன் செங்குட்டுவன் - பேராசிரியர் - கு. திருமேனி	72
	இலக்கணம்	
	3) அணி இலக்கணம்	81
	4) பொருளிலக்கணம்	85

@KTBS NOT TO BE REPUBLISHED

மொழி வாழ்த்து
எங்கள் தமிழ்

இனிமைத் தமிழ்மொழி எமது-எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல்அமுது
கனியைப் பிழிந்திட்ட சாறு-எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!

தனிமைச் சுவையுள்ள சொல்லை-எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ்மீதில் .

- பாரதிதாசன்.

©TBS NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

இப்பாடல் ‘ பாரதிதாசன் கவிதைகள்’ என்ற தொகுப்பில் உள்ளது. தமிழின் சிறப்புக்களைத் தம்பாடல்களின் வழியே புலப்படுத்துவதில் இவருக்கு நிகர் இவரே என்ற கருத்து உறுதிப்படுகிறது .

ஆசிரியர்குறிப்பு :

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாரதியின் வழிநின்று சமுதாய மறுமலர்ச்சிக்காகவே பாடியவர்; வாழ்ந்தவர். இவரின் இயற்பெயர் சுப்புரத்தினம். அழகின்சிரிப்பு, இருண்டவீடு, குடும்பவிளக்கு, பாண்டியன்பரிசு, என்று பல கவிதை இலக்கியங்களைப் படைத்துள்ளார். பாரதிதான் கவிதைகள் என்ற தொகுப்புநூல்கள் பல வெளிவந்துள்ளன .

அருஞ்சொற்பொருள் :

வாய்த்த-கிடைத்த ; கதி-நிலை(பிறவி) ; பேறு-பயன் ; நனி-மிகுதி .

கருத்துரை :

எமது தமிழ்மொழி இனிமையுடையது. எமக்கு இன்பம் தருவதற்காகக் கிடைத்த நல்அமுதம் தான் எங்கள் தமிழ் மொழி. அதன் சுவை கனிச்சாற்றின் சுவைபோன்றது. எங்கள் வாழ்வுநிலையில் உயர்ந்திட

எங்கள் தமிழ் உதவுவதால் அது எங்களுக்குக் கிடைத்த பெரும்பேறாய்க் கருதுகிறோம். மிகச்சிறந்த பொருள்களைத் தரும் சொற்களை உடையது தமிழ்மொழி. இத்தன்மைபோல் வேறுமொழிகளில் இச்சிறப்பு இல்லை. தமிழ் மொழி மீது தமிழ் நாட்டினர்க்கு பற்றும், காதலும் மிகவும் அதிகம் உண்டு .

பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க:

1. இனிமைத் தமிழ் மொழி எமது-எமக்கின்பந் தரும்படி வாய்த்த __________

   அ) தண்ணமுது ; ஆ) நல்அமுது ;

   இ) சுவையமுது ; ஈ) மொழிஎமது .

2. தனிமைச் சுவையுள்ள சொல்லை _ எங்கள் தமிழினும் வேறெங்கும்___________

   அ) சொன்னதில்லை ; ஆ) வந்ததில்லை ;

   இ) படைத்ததில்லை ; ஈ) யாங்கண்டதில்லை .

3. நனியுண்டு நனியுண்டு என்பது______________

   அ) அடுக்குத்தொடர் ; ஆ) இரட்டைக்கிளவி ;

   இ) அசை ; ஈ) விளி .

II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக.

1. நல்அமுது என்று பாரதிதாசன் எதனைக் குறிக்கிறார் ?
2. சாறு என்றும் பேறு என்றும் குறிக்கப்படுவது யாது ?
3. தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை என்று சுட்டப்படுவது யாது ?

III. பத்து வரிகளில் விடை எழுதுக.

1. பாரதிதாசன் " எங்கள் தமிழ்மொழி " என்று பாராட்டும் சிறப்பினை எழுதுக.

©KTBS NOT TO BE REPUBLISHED

அ) இடம்சுட்டிப் பொருள் விளக்குக.

1. நனியுண்டு நனியுண்டு காதல்-தமிழ்
   நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில் .

ஆ) மொழிப்பயிற்சி

1. சேர்த்து எழுதுக.

இனிமை+தமிழ் ; இன்பம்+தரும்படி ; கனியை+பிழிந்திட்ட .

2. பிரித்து எழுதுக.

தனிமைச்சுவையுள்ள ; யாங்கண்டதில்லை ; நனியுண்டு .

3. எதிர்ச்சொல் தருக :

இன்பம் ; அமுது ; கனி .

@KTBS
NOT TO BE REPUBLISHED

நாட்டு வாழ்த்து

" இந்திய நாடிது என்னுடை நாடே "
   என்று தினந்தினம் நீயதைப்பாடு;
சொந்தமில் லாதவர் வந்தவர் ஆள
   தூங்கிக் கிடந்தது போனது மாள;
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
   வாடின காலங்கள் ஓடின தம்பி!
இந்தத் தினம் முதல் "இந்திய நாடு
   என்னுடை நாடே"யென்ற எண்ணத்தைக் கூடு .

- நாமக்கல் கவிஞர்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

இப்பகுதி நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. தொகுத்தவர் துணிகை உலகநாதன் அவர்கள் .

ஆசிரியர்குறிப்பு :

ஆசிரியர் நாமக்கல் கவிஞர் 19.10.1888 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது பெற்றோர் வெங்கட் ராம பிள்ளை, அம்மணி அம்மாள். இவர் 1949 ஆம் ஆண்டு தமிழ் நாட்டு அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டார். டெல்லியில் சாகித்ய அகாடமியின் உறுப்பினராகவும் பதவி வகித்தார் .

கருத்துரை :

இந்திய நாடு என்னுடைய நாடு என்று தினந்தோறும் பாடு ; நம் நாட்டுக்குச்சொந்தமில்லாது எங்கிருந்தோ வந்தவர் நம் நாட்டை ஆள நாம் தூங்கிக்கிடந்தது போதும் ; வந்தவர்கள்,போனவர்கள் யாவரையும் நம்பி வாடியது போதும் ; இந்த நாள் முதல் ‘ இந்திய நாடு என்னுடைய நாடு’ என்ற எண்ணத்தோடு வாழ்க .

பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க

1. தினந்தினம் இந்திய நாட்டை என்ன வென்று பாட வேண்டுமாம்?

   அ) என்னுடை நாடே ஆ) எம்முடைய நாடு

   இ) அழகிய நாடு ஈ) புகழ்மிகு நாடு

2. வந்தவர் போனவர் யாரையும் நம்பி__ ஓடின தம்பி .

   அ) வாட்டிய காலங்கள் ஆ) வாழ்ந்த காலங்கள்

   இ) வாடின காலங்கள் ஈ) வாய்ந்த காலங்கள் .

II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. தினம் தினம் 'என்னுடைய நாடே' என்று பாடப்படும் நாடு எது ?
2. சொந்தமில்லாதவர் வந்தவர் ஆள நாம் யாது செய்திருந்தோம் என்கிறார் நாமக்கல் கவிஞர் ?
3. நீ எத்தகைய "எண்ணத்தைக் கூடு" என்கிறார் நாமக்கல் கவிஞர்?

III. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக;

1. நாமக்கல் கவிஞர் 'என்னுடை நாடு' என்ற கவிதையில் கூறும் கருத்துக்களைக் குறித்து எழுதுக .

IV. இடம் சுட்டிப் பொருள் விளக்குக;

1. சொந்தமில்லாதவர் வந்தவர் ஆள .
2. வந்தவர் போனவர் யாரையும் நம்பி
   வாடின காலங்கள் ஓடின தம்பி .

ஆ. மொழிப்பயிற்சி

1. சேர்த்து எழுதுக

   நாடு + இது ; தினம்+தினம் ; நீ + அதை + பாடு ;

   சொந்தம் + இல்லாதவர்

2. எதிர்ச்சொல் தருக

   போனது ; மாள ; வந்தவர் ; நம்பி ; வாடின .

3. வாக்கியத்தில் அமைக்க :

   தினந்தினம் ; தூங்கிக்கிடந்தது ; யாரையும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

II. அறவுரை பழமொழி நானூறு

சிறந்த ஆற்றலரை மறைக்க இயலாது

பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டுக்
கரந்த மறக்கலும் ஆமோ? – நிரந்து எழுந்து
வேயின் திரண்டதோள் வேல் கண்ணாய் விண் -இயங்கும்
ஞாயிற்றைக் கைம் மறைப்பார் இல் .

1.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் !

நெடியது காண்கிலாய் நீயொளியை நெஞ்சே
கொடியது கூறினாய் மன்ற – அடியுளே
முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் கண்டு விடும் .

-முன்றுறையரையனார்

@KTBS
NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு ;

பழமொழி பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழியை அமைத்து வாழ்வியல் கருத்தை விளக்குகிறது. இந்நூலில் நானூறு வெண்பாக்கள் உள்ளன. எனவே இதனைப் பழமொழி நானூறு என்றும் கூறுவர். முடியுடை மூவேந்தரைப் பற்றிய செய்திகளும் கடையெழு வள்ளல்கள் சிலரைப் பற்றிய செய்திகளும்,இதிகாசப் புராணக்கதைகளும் இந்நூலில் காணப்படுகின்றன .

ஆசிரியர் குறிப்பு:

பழமொழி நானூறு என்ற நூலை இயற்றிய ஆசிரியர் முன்றுறையரையனார். இவர் சமண மதத்தைச் சார்ந்தவர். இவர் முன்றுறை என்ற ஊரை ஆண்ட ஒரு குறுநில மன்னர் எனக் கூறுவர் சிலர். இவருடைய காலம் மதுரையில் வச்சிர நந்தி சங்கம் நிலவிய கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு என்பர் .

•

கருத்துரை:

1. வரிசைப்பட உயர்ந்து எழுந்து மூங்கிலினைப் போல் திரண்ட தோள்களையும்,வேல் போன்ற கண்களையும் உடைய பெண்ணே ! வானில் உலவும் ஞாயிற்றைக் கையால் மறைப்பவர் இல்லை. அது போன்று பரந்த அறிவு ஆற்றல் உடையவரைப் பாசியைப் போன்ற அடாத சில சொற்களையும் அவர் மேல் இட்டு அவரது புகழை மறைத்து ஒளித்து விடவும் முடியுமோ ? முடியாது .

பாசி – நீர்ப்பாசி , வேய் - மூங்கில் .

2. என் உள்ளமே! நீ மற்றவர்க்குத் தீய செயலைச் செய்யும்படி சொன்னாய். ஆதலால் நீ அறிவு அற்றாய்! நீ மற்றவர்க்குத் தீமை செய்தலால் வரும் பயனை நீண்ட காலத்திற்குப் பின்னன்றி அறியாய், அந்நிலையில் பிறன் ஒருவனுக்குத் தீமையைப் பகலின் முன் பகுதியில் செய்தானாயின் தனக்கு வரும் தீமையைப் பகலின் பின் பகுதியிலேயே தவறாமல் அடைவான் .

பிறர்க்கின்னா முற்பகல் செயின் தமக்கு இன்னா

பிற்பகல் தாமே வரும் -என்னும் குறள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. _________ கைம்மறைப்பார் இல் .
2. _________ கண்டான் பிறன்கேடு தன்கேடு பிற்பகல் கண்டுவிடும்.

II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

1. ‘ வேய் ’ என்பதன் பொருள்

அ) மூங்கில் ஆ) பாக்கு

இ) வேம்பு ஈ) ஆல் .

2. ‘பழமொழி நானூறு ’ – நூலின் ஆசிரியர்

அ) திருவள்ளுவர் ஆ) கம்பர்

இ) முன்றுறையரையனார் ஈ) நல்லாதனார் .

III. ஒரு வாக்கியத்தில் விடை தருக :-

1. விண்ணில் இயங்கும் ஞாயிற்றை எதனால் மறைக்க இயலாது ?
2. பரந்த அறிவாற்றல் உடையவரைப் பழிப்பது எதனைப் போன்றது?
3. நீண்ட காலத்திற்குப் பின் மனம் அறியும் செயல் யாது ?

IV. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :-

1. " ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல் " - என்ற பழமொழியை முன்றுறையறையனார் வழிநின்று விளக்குக .
2. தனக்கு வரும் தீமையைப் பிற்பகலிலேயே அடைபவன் யார் ? விளக்குக .

V. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :-

1. ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல் .
2. தன் கேடு பிற்பகல் கண்டு விடும் .

தெரிந்து கொள்க :-

1. பதினெண் கீழ் கணக்கு நூல்கள் .
2. பதினெண் மேல் கணக்கு நூல்கள் .

@KTBS
NOT TO BE REPUBLISHED

Z2H6U4

4. சிறுபஞ்சமூலம்

பெருங்குணத்தார் சேர்மின் பிறன்பொருள் வௌ வன்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின் - ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின் வருங்காலன் திண்ணிதே
வாய்ச்சொல்லே யன்று வழக்கு .

-காரியாசான் .

நூல்குறிப்பு :

குறைந்த அடிகளையுடைய செய்யுள்களால் அறம், பொருள், இன்பம் என்பன கொண்டு அமைந்த நூல் பதினெண்கீழ்க்கணக்கு ஆகும். பதினெண்கீழ்க்கணக்கு என்ற தொகுப்பினுள் 18 நூல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம் .

மருத்துவ நூலில் கூறப்பட்ட கண்டங்கத்தரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லிவேர் ஆகிய பஞ்சமூலங்கள் மக்கள் பிணிகளைத் தீர்ப்பதுபோல், இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அடங்கிய " ஐந்தைந்து " பொருள்களாலும் தன்னைப் படித்து உணர்வோர்களின் குறைகளை நீக்கி நிறைகளைப் பெருக்கி வாழ்ந்திட வழிகாட்டும் சிறப்புடையது .

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஆசிரியர் குறிப்பு :

இந்நூலின் ஆசிரியர் காரியாசான் ஆவார். காரி என்பது இயற்பெயர். ஆசான் என்பது தொழில் பற்றி வந்த ஒட்டு இவரைச் சமணர் என்று கூறினும் இவர் தம் நூலில் சமண சமயக் கருத்துகள் குறைவாகவும் சமயப் பொதுக் கருத்துக்கள் மிகுதியாகவும் உள்ளன.

அருஞ்சொற்பொருள் :

சேர்மின் - சேருங்கள் ; வௌவன்மின் - கவர்ந்துகொள்ளாதீர்கள் (திருடாதீர்) ; ஒருங்குணர்ந்து - எல்லா வழிகளிலும் எண்ணிப் பார்த்து ; திண்ணிதே - உறுதியானதே ; வாய்ச்சொல் - வெளிப்படுத்தும் சொல்.

கருத்துரை :

நற்குணமுடையாரைச் சேருங்கள்; பிறர்பொருளைக் கவராதீர்கள்; தீய குணமுடையோரிடம் நட்பு கொள்ளாது நீங்கியிருங்கள்; நன்கு யோசித்து தீய சொற்களைப் பேசாது இருங்கள்; காலன் வருவான். இது உண்மை .

பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க :

1. பெருங்குணத்தார் __________

அ) கழிமின் ; ஆ) சேர்மின் ;

இ) காமின் ; ஈ) வெளவன்மின் .

2. பிறன்பொருள் __________

அ) சேர்மின் ; ஆ) வெளவன்மின் ;

இ) கழிமின் ; ஈ) காமின்

II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. சிறுபஞ்சமூலம் யாரிடம் சேர்ந்து பழகவேண்டும் என்று கூறுகிறது?
2. தீச்சொல் சொல்லாதிருக்க எவ்வாறான உணர்வைக் கடைபிடிக்கவேண்டும் ?

III. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக ;

1. சிறுபஞ்சமூலம் நூலின் சிறப்பினை விளக்குக .

IV. இடம் சுட்டிப் பொருள் விளக்குக ;

1. ஒருங்குணர்ந்து தீச்சொல்லே காமின் .
2. வாய்ச்சொல்லே யன்று வழக்கு .

மொழிப்பயிற்சி

1. சேர்த்து எழுதுக

பெரும் + குணத்தார் ; ஒருங்கு + உணர்ந்து ;

தீ + சொல் ; சொல்லே + அன்று .

2. பிரித்து எழுதுக

வருங்காலன்; வாய்ச்சொல் .

NOT TO BE REPUBLISHED @KTBS

சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம்
பெரிய புராணம்
தில்லைவாழ் அந்தணர் சருக்கம்
இளையான்குடிமாற நாயனார் புராணம்

இளையான்குடி மாறரும் அவர் மனைவியாரும் மெய்யடியார்கட்கு நல் விருந்தளிக்கும் நற்றொண்டினர். வறுமைக் காலத்தும் மனம் சுருங்குதலின்றி விருந்தென்னும் வேள்வி புரிந்தவர், ஈரநெல் முளையை வாரிக் கொண்டு வந்து மாறர் கொடுக்க அம்மையாரும் (மனைவி) கைவன்மையால் திருவமுதாக்கினார். தபோதனர் வடிவில் வந்த இறைவனும் மனமகிழ்ந்து அருளினார். 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' என்னும் தனித்தமிழ் மறைக்கு எடுத்துக் காட்டாகும் நிலையில் மாறர் தம்பதியினர் வாழ்க்கை அமைந்தது சிறப்பாகும். ஏலவார் குழலாள் தன்னோடு இடப வாகனத்தில் காட்சி தந்த இறைவன், இருவருக்கும் சிவலோக பதவி அளித்தார் .

இளையான் குடிமாற நாயனார் புராணம்

1. *அம் பொன் நீடிய அம்பலத்தினில் ஆடுவார் அடி சூடுவார்;*
தம்பிரான் அடிமைத் திறத்து உயர் சால்பின் மேன்மை தரித்து உளார்;
நம்பு வாய்மையில் நீடு சூத்திர நல் குலம் செய் தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கினார்; இளையான் குடிப் பதி மாறனார்.

2. *ஏரின் மல்கு வளத்தினால் வரும் எல்லை இல்லது ஓர் செல்வமும்*
நீரின் மல்கிய வேணியார் அடியார் திறத்து நிறைந்தது ஓர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடு பயன் கொள்வார்.

3. *ஆரம் என்பு புனைந்த ஐயர் தம் அன்பர் என்பது ஓர் தன்மையால்*
நேர வந்தவர் யாவர் ஆயினும் நித்தம் ஆகிய பத்தி முன்
கூர வந்து எதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப் புலத்து
ஈரம் மென் மதுரப் பதம் பரிவு எய்த முன்னுரை செய்தபின்.

4. *கொண்டு வந்து மனைப் புகுந்து குலாவு பாதம் விளக்கியே,*
மண்டு காதலின் ஆதனத்து இடைவைத்து அருச்சனை செய்த பின்,
உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத் திறத்தினில் ஒப்பு இலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்துளார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

5. ஆளும் நாயகர் அன்பர் ஆனவர் அளவு இலார் உளம் மகிழவே
நாளும் நாளும் நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளும் மா நிதியின் பரப்பு நெருங்கு செல்வம் நிலாவி, எண்
தோளி னார் அள கைக்கிருத்திய தோழ னாரென வாழநாள் .

6. செல்வம்மேவியநாளில்இச்செயல்செய்வதுஅன்றியும்மெய்யினால்
அல்லல் நல்குரவு ஆன போதினும் வல்லர் என்று அறிவிக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து நாள் தொறும் மாறி வந்து
ஒல்லையில் வறுமைப் பதம் புக உன்னினார் தில்லை மன்னினார்.

7. இன்ன ஆறு வளம் சுருங்கவும் எம்பிரான் இளையான் குடி
மன்னன் மாறன் மனம் சுருங்குதல் இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறி இறுக்க உள்ள கடன்கள் தக்கன கொண்டு பின்
முன்னைமாறுஇல்திருப்பணிக்கண்முதிர்ந்தகொள்கையர்ஆயினார்.

8. மற்று அவர் செயல் இன்ன தன்மையது ஆக, மால் அயன் ஆன அக்
கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத கொள்கையர் ஆயினார்,
பெற்றம் ஊர்வதும் இன்றி நீடிய பேதையாள் உடன் இன்றி ஓர்
நல் தவத்தவர் வேடமே கொடு ஞாலம் உய்ந்திட நண்ணினார்.

9. மாரிக் காலத்து இரவினில் வைகியோர்
தாரிப்பு இன்றிப் பசி தலைக் கொள்வது
பாரித்து இல்லம் அடைந்த பின், பண்பு உற
வேரித் தாரான் விருந்து எதிர் கொண்டனன்.

10. ஈர மேனியை நீக்கி இடம் கொடுத்து
ஆர இன் அமுது ஊட்டுதற்கு ஆசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
தீரவே பசித்தார் செய்வது என்?'' என்று.

11. நமக்கு முன்பு இங்கு உணவு இலை ஆயினும்
இமக் குலக்கொடி பாகர்க்கு இனியவர்
தமக்கு நாம் இன் அடிசில் தகவு உற
அமைக்கு மாறு எங்ஙனே? அணங்கே!' என.

©KTBS NOT TO BE REPUBLISHED

12. மாது கூறுவள் 'மற்று ஒன்றும் காண்கிலேன்;
ஏதிலாரும் இனித் தருவார் இல்லை;
போதும் வைகிற்றுப் போம் இடம் வேறு இலை;
தீது செய்வினை யேற்கு என் செயல்?'' என்று

13. 'செல்லல் நீங்கப் பகல் வித்திய செந் நெல்
மல்லல் நீர் முளை வாரிக் கொடு வந்தால்
வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும்; மற்று
அல்லது ஒன்று அறியேன்' என்று அயர்வு உற.

14. மற்று, அம்மாற்றம் மனைவியார் கூற, முன்
பெற்ற செல்வம் எனப் பெரிது உள் மகிழ்ந்து
உற்ற காதலினால் ஒருப் பட்டனர்
சுற்று நீர் வயல் செல்லத் தொடங்குவார்.

15. பெருகு வானம் பிறங்க மழை பொழிந்து
அருகு நாப்பண் அறிவு அரும் கங்குல் தான்
கருகு மை இருளின் கணம் கட்டு விட்டு
உருகு கின்றது போன்றது உலகு எலாம்.

16. எண்ணும் இவ் உலகத்தவர் யாவரும்
துண் எனும்படி தோன்ற முன் தோன்றிடில்
வண்ணம் நீடிய மைக்குழம்பு ஆம் என்று
நண்ணல் செய்யா நடு இருள் யாமத்து.

17. உள்ளம் அன்பு கொண்டு ஊக்க, ஓர் பேர் இடாக்
கொள்ள முன் கவித்துக் குறியின் வழிப்
புள் உறங்கும் வயல் புகப் போயினார்;
வள்ளலார் இளையான் குடி மாறனார்.

18. காலினால் தடவிச் சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர் வழிச் சார்ந்தன
கோலி வாரி இடா நிறையக் கொண்டு,
மேல் எடுத்துச் சுமந்து ஒல்லை மீண்டனர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

19. வந்த பின் மனைவியாரும் வாய்தலின் நின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி ஊற்றி,
வெம் தழல் அடுப்பின் மூட்ட விறகு இல்லை' என்ன மேலோர்,
அந்தம் இல் மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார்.

20. முறித்து அவை அடுப்பின் மாட்டி முளை வித்துப் பதம் முன் கொள்ள
வறுத்த பின் அரிசியாக்கி வாக்கிய உலையில் பெய்து
வெறுப்பு இல் இன் அடிசில் ஆக்கி, மேம் படு கற்பின் மிக்கார்
'கறிக்கு இனி என் செய்கோம்' என்று இறைஞ்சினர் கணவனாரை.

21. வழி வரும் இளைப்பின் ஓடும் வருத்திய பசியினாலே
'அழிவு உறும் ஐயன்' என்னும் அன்பினில் பொலிந்து சென்று.
குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழி முதல் பறிப்பார் போலப் பறித்து. அவை கறிக்கு நல்க.

22. மனைவியார்கொழுநர் தந்த மனமகிழ் கறிகள் ஆய்ந்து
புனல் இடைக் கழுவித் தக்க புனித பாத்திரத்துக் கைம்மை
வினையினால் வேறு வேறு கறி அமுது ஆக்கிப் பண்டை
நினைவினால் குறையைநேர்ந்து   திருவமுது அமைத்து நின்று.

23. கணவனார் தம்மை நோக்கிக் கறி அமுது ஆன காட்டி,
'இணை இலாதாரை ஈண்டு அமுது செய்விப்போம்' என்ன
உணர்வினால் உணர ஒண்ணா ஒருவரை உணர்த்த வேண்டி
அணைய முன் சென்று நின்று அங்கு அவர் துயில் அகற்றல் உற்றார்.

24. 'அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய்ஈண்டு அமுது செய்து அருள்க!' என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழும் திரு மனைவியாரும் தொண்டரும் திகைத்து நின்றார்.

25. மால் அயற்கு அரிய நாதன் வடிவு ஒரு சோதி ஆகச்
சாலவே மயங்குவார்க்குச் சங்கரன் தான் மகிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோடு இடப வாகனன் ஆய்த் தோன்றிச்
சீலம் ஆர் பூசை செய்த திருத் தொண்டர் தம்மை நோக்கி.

©KTBS
NOT TO BE REPUBLISHED

26. ‘அன்பனே!அன்பர் பூசை அளித்த நீ அணங்கி னோடும்
என் பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன் பெரு நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப
இன்பம் ஆர்ந்து இருக்க’ என்றே அருள் செய்தான் எவர்க்கும் மிக்கான்.

நூல்குறிப்பு :

‘உலகெலாம்’ என்னும் திருமொழியைச் சேக்கிழார் பெருமானுக்குத் தில்லை அம்பலவாணர் பாடும் அருள் முதலாகக் கொடுத்தருள திருத்தொண்டர் மாக்கதை எனவும் சுட்டப்படுகின்ற ‘பெரியபுராணம்’ சேக்கிழார் பெருமானால் இயற்றப்பட்டது. அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றியும் ஒன்பது தொகையடியார்களைப் பற்றியும் பாடப்பட்ட நூலாகும். இந்நூல் பன்னிரண்டாம் திருமுறையாகத் திகழுகின்றது. சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை , நம்பியாண்டார் நம்பிபாடிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய நூல்களை முதல் நூலாகவும் வழிநூலாகவும் கொண்டு இயற்றப்பட்டது. இது திருமலைச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் ஈறாக அமையும் பதின்மூன்று சருக்கங்களைக் கொண்டது.

ஆசிரியர்குறிப்பு :

அருண்மொழித்தேவர் என்ற இயற்பெயரைக் கொண்ட சேக்கிழார் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இரண்டாம் குலோத்துங்க சோழன் (அநபாயர்) உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டத்தினை வழங்கி இவரை முதலமைச்சராக ஆக்கிக் கொண்டார். அரசரின் வேண்டுகோளிற்கிணங்க,சேக்கிழார் அடியார்களின் வரலாற்றினை விரித்து, ஒரு பெருங்காப்பியமாக-பெரிய புராணமாகச் செய்தருளினார். 4286 பாடல்களைக் கொண்ட இந்நூலினை இயற்றிய பெருமை இவரைச்சாரும்.

கருத்துரை

1) அழகிய பொன்னினால் நீடிய அம்பலத்திலே ஆடுகின்ற கூத்தரது திருவடிகளை எப்போதும் சிரத்திற் சூடிக்கொள்பவர்,சிவபெருமானின் அடிமைத் திறத்திலே உயர்ந்த சால்பினால் உளதாகிய மேன்மை தம்முடையதாகத் தரித்து வாழ்பவர். நம்பிக்கைக்குரியதாகிய நீடிய செய்த தவத்தின் பயனாக அவதரித்து இவ்வுலகத்தை விளக்கம் செய்தார். இளையான்குடியென்னும் ஊரிலேஅவதரித்த மாறன் என்ற பெயருடைய பெரியவர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

2) ஏர்த் தொழிலால் நிறைந்து பெருகும் உழவு வளங்களினாலே வரும் உணவும் அவை கொண்டு ஆக்கப் பெறும் அளவில்லாத பிற செல்வமும் கங்கை தங்கிய சடையாரடியவர்கள் திறத்திலே நிறைந்ததாகிய சிறப்பினின் மிக்க அன்பினது மேன்மை திருந்தும்படி நிலைத்த மனமும் உலகிலே வளர்ந்து நிலவுமாறு விரும்பி, அவற்றைத்தாம் பெற்றதனாலாகிய நீடிய பயனை அடைவாராய்.

3) ஆரமும் எலும்பும் அணிந்த ஐயரது அன்பர்கள் என்ற ஒரே தன்மையினை உட்கொண்டு, அதுவே காரணமாக வைத்து முன்னே வந்தவர்கள் யாவரேயாயினும் உறுதியாகி நிலைத்த புத்திகூர வந்து எதிர்கொண்டு அழைத்துக் கைகுவித்து எதிரே வணக்கமாக நின்று அவர்கள் கேட்குமாறு குளிர்ந்த ஆறுதலான இனிய மொழிகளை அவர்கள் அன்பு கொள்ளுமாறு சொல்லி அதன்பின்.

4) அவர்களைத் தமது மனைக்குளே அழைத்துக் கொண்டு வந்து புகுந்து, விளங்குகின்ற அவர்களின் திருவடிகளை விளக்கி, மிகுந்த ஆசையினாலே ஆசனத்தில் எழுந்தருளுவித்து அருச்சித்து அதன்பிறகு நான்கு விதத்தில் செய்த ஆறு சுவையுணவுகளையும் ஒப்பிலாத சிவபெருமானடியவர்களின் கையில் அமுது செய்தருளுமாறு கொடுத்துள்ளார்.

5) எல்லா உயிர்களையும் தமக்கு ஆளாக உடைய இறைவனது அன்பராயினார்கள் அளவில்லாதவர்கள் மனமகிழ்ந்து ஒவ்வொரு நாளும் பெருகிக்கூடி வந்து திருவமுது செய்து இவருடைய அன்பினை அனுபவித்த தன்மையின் பயனாகிய நன்மையினாலே, நீளும் பெருகும் செல்வங்களின் பரப்பும் நெருங்கு செல்வங்களும் நீடித்துப் பெருக்கெடுக்க எண்டோளாராகிய சிவபெருமான் அளகாபுரியினை ஆளும்படி அமைத்த தம் தோழனாகிய குபேரனே இவர் என்று சொல்லும்படி நாயனார் வாழ்ந்து வருகின்ற நாளிலே.

6) செல்வங்கள் மிகுந்திருக்கும் காலத்திலே இச்செய்கைகள் செய்வதறியும் மெய்யினாலே துன்பம் தரும் தரித்திரம் வந்த காலத்திலும் இச்செயல் செய்ய இவர் வல்லவராவர் என்ற உண்மையை உலகிற்கு அறிவிக்கும்பொருட்டு, செழித்து நீடிவந்த அச்செல்வங்கள் மெல்ல மறைந்து போய் நாள்தோறும் மாறிவந்து,பின் விரைவிலே வறுமையாகிய நிலை வந்து சேருமாறு தில்லையில் மன்னிய இறையனார் திருவுள்ளம் செய்தனர்.

@KTRS NOT TO BE REPUBLISHED

7) இப்படியாகத் தம் செல்வங்கள் சுருங்கிய போதிலும் நமது பெருமானும் இளையான் குடியின் தலைவருமாகிய மாறனார் மனநிலை சிறிதும் சுருங்காமல் நின்று, தம்மிடம் இருப்பனவற்றை மாற்றியும் தன்னை மாறிக்கொடுக்கத்தக்கனவாகிய கடன்களை வாங்கியும் பின்னும் முன்னால் செய்து வந்த ஒப்பற்ற அடியார் பூசையாகிய திருப்பணியிலே மேலும் முற்றிய நிலைமையை உடைவராயினார்.

8) மேலும் அந்நாயனாரின் செயல்கள் இத்தன்மையினவாகி நிற்க, திருமாலும் பிரம்மனுமாகிய அந்த வெற்றியுடைய பன்றியும் அன்னமும் அறியாத கொள்கையினரான இறைவனார், இடப வாகனத்தை மேற்கொள்ளுவதுமில்லாமல், என்றும் நலமுடன் தம்முடன் நீடியுள்ள உமாதேவியார் உடனில்லாமல் ஒரு நல்ல தவசியாரின் திருவேடத்தினையே மேற்கொண்டு இவ்வுலகம் உய்யும்பொருட்டு எழுந்தருளினார்.

9) அவ்வாறு நண்ணிய காலமாகிய மழைக்காலத்தில் ஒரு நாளிரவிலே உறக்கமின்றி விழித்திருந்து வேறு ஓராதரவும் இல்லாமையினாலே மீதூரும் பசி மேலும் அதிகரிக்கப் பெற்று, இல்லமடைந்த பின் வீட்டுக் கதவினைத் தாழிட்டு அடைத்த பின்னர், உற்ற பண்பினாலே, தேன் பொருந்திய மாலையணிந்த மாறனார் விருந்தினரை எதிர்கொண்டு வரவேற்றார் .

10) முதலில் அவரது திருமேனியில் ஈரம்போக்கிப் பின் அவர் எழுந்தருளியிருக்க ஓரிடம் கொடுத்து, அதன்பின், அவர் மனநிறைவு கொள்ளுமாறு அமுதூட்டுதற்கு ஆசை கொண்டமையினால் தம் மனைவியை நோக்கி, ‘ இந்த தபோதனர் தீரப் பசித்துள்ளார். நாம் செய்வதென்னே’ என்று வருந்தினார் .

11) முன்னர் இங்கு நமக்கே உணவில்லை என்பதுண்மையேயாயினும் இமயமலை பெற்ற குலக்கொடியாகிய பார்வதியின் பாகற்கினியவர் தமக்கு நாம் இனிய உணவு தக்கபடி அமைத்தல் வேண்டும், ‘ அது செய்யும் வழி யாது ? அணங்கே ’ என்று நாயனார் கூறினார்.

12) அதற்கு அம்மையார் விடை கூறுவாராய் அதற்கு வழி வேறொன்றும் காண்கிலேன்; பிறர் எவரும் இனிக் கொடுப்பவர்களில்லை. காலமும் கழிந்து நள்ளிரவாயிற்று; மற்றும் சென்று தேடக்கூடிய பிற இடங்களும் ஒன்றுமில்லை, தீவினையேனுக்கு இனியென்ன செயல் உள்ளது ? என்று கூறினார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

13) செல்வதை விடுத்த நிலையில் " இன்று பகலில் வயலிலே விதைத்த செழிப்பானநீர் முளை நெல்லைத் தேவரீர் வாரிக்கொண்டு வந்து கொடுப்பீர்களானால், அடியேன் வல்ல வகையாலே அமுது சமைத்தலும் ஆகும்; இதனை தவிர்த்து வேறொரு வழியும் அறியேன் " என்று கூறி வருந்தினார் .

14) அம்மொழிகளை மனைவியார் சொல்லக் கேட்டதும் நாயனார் முன்னே தேடி வைத்திருந்த செல்வம் பெற்றவர் போன்று மிகவும் மனமகிழ்ந்து, பொருந்திய ஆசையினாலே சற்று நீருடைய தம் வயலிற்கு முளைவாரிக் கொண்டு வரப்போவதற்கு இசைந்தார்.

15) வான வெளியிலே விளங்கப் பெருமழை பொழிதலாலே பக்கங்களும் இடைவெளியும் அறிய இயலாதபடி இருண்ட நள்ளிரவானது கருகிய மை போன்ற இருட்கூட்டம் தன் செறிவினை விட்டு உருகுகின்றது போன்று அந்நேரத்தே உலகெலாம் தோன்றியது.

16) எண்ணுகின்ற இவ்வுலகத்தவர் வேறு எவரும் நடுக்கமுறும் வகைதோன்ற அவ்வாறு அவ்விருள் கண்முன்னே புலப்படும் காலத்தில் நீடிய வண்ணமுடைய மைக்குழம்பே இது என்று கொண்டு வெளிப்புறப்பட இயலாதபடி இருள் செறிந்த நள்ளிரவு .

©KTBS NOT TO BE REPUBLISHED

17) தமது உள்ளத்தை அன்பானது தன் வசப்படுத்திக் கொண்டு ஊக்கம் தந்து செலுத்தத் தாம் வாரிக் கொணரும் முளை நெல்லைக் கொள்ளத்தக்கதொரு பெரிய இறை கூடையைத் தலைமேற் கவித்துக் கொண்டு குறி வழியே சென்று நீர்ப்பறவைகள் தூங்கும் அந்த வயலுக்குள் புகுமாறு வள்ளலாராகிய இளையான்குடி மாறனார் போனார் .

18) கால்களினாலே வழியைத் தடவி அறிந்து போய், வயலினுள்ளே மழை நீரின் வழியே மிதந்து ஒரு வழிச்சார்ந்த நெல் வெண்முளைகளைக் கையினாலே சேர்த்து வாரியெடுத்து இறைகூடை நிறையக் கொண்டு கூடையை மேலே தூக்கியெடுத்துத் தலையில் சுமந்து கொண்டவராய் மிக விரைவிலே வீட்டிற்குத் திரும்பி வந்தார் .

19) நாயனார் மீண்டும் வீட்டிற்கு வந்த பின், மனைவியார் அவர் கொணர்ந்த நெல்முளை நிறைந்த இறை கூடையை வாங்கிக் கொண்டு, மனத்திலே மிக்க விருப்பமுடையராய், நெல் முளையில் படிந்திருந்த சேற்றை நீரினாலே கழுவி ஊற்றியபின் தம் நாயகரிடம், ' இந்நெல்லைப்

பக்குவப்படுத்தற்கு அடுப்பில் எரிக்க விறகில்லை ’ என்று கூற, மேன்மையுடையோராகிய நாயனார், மனையிலே நீடிய கூரையை விறகின் பொருட்டுஅறுத்துத்தள்ளினார் .

20) அவ்வாறு வெட்டி வீழ்த்திய அக்கூரைவரிச்சுகளை முறித்து அடுப்பிலே நெருப்பு மூட்டி அதில் நெல் முளைகளைப் பதமாக வறுத்த பின்னர், அதனை அரிசியாகக் குற்றியெடுத்துச் சுத்தம் செய்து, நீர் பெய்து வைத்த உலையிலே இட்டு இனிய அமுது சமைத்து வைத்து, அதன் பின்னர் மிகச்சிறந்த கற்பின் திறத்திலே மேம்பட்ட மனைவியார், "கறி வகைகளுக்கு இனி என்ன செய்வோம் ?" என்று சொல்லித் தம் கணவனை வணங்கினார் .

21) பசியினாலே எமது ஐயன் வருந்தும் என்கின்ற அன்பினாற் கிளர்ந்து சென்று தம் கொல்லையிலே முளைக்க வைத்த குழிகளினின்றும் மேலே கிளம்பும் பருவமுறாத சிறிய இலைக்கறிப் பயிர்களைக் கையினால் தடவிப்பாசப் பழிமுதலை அறவே பறிப்பவர் போல அவற்றை வேரோடும் பிடுங்கி வந்து கறிக்காக மனைவியார் கையில் கொடுத்தார்.

22) மனைவியார் தம் கணவர் மனமகிழ்வுடன் தந்த கறிகளை இலை வேறு, தண்டு வேறு முதலியனவாக ஆய்ந்தெடுத்துக் கறிக்கானவற்றை நீரினால் கழுவி, அதற்கேற்ற தூய பாத்திரத்திலேயிட்டு முன் பழகிய தன் கைப்பழக்கத்தினாலே வெவ்வேறாகப் பலவகைக் கறிகளாகச் சமைத்துப் பழைய நினைவினால் உளதாகிய குறையை எண்ணி ஒருவாறு மனம் தேர்ந்து கொண்டு, திருவமுது வகைகளை முற்ற அமைத்து எழுந்து நின்றார்.

23) கணவரை நோக்கிக் கறிகளும் அமுதும் எல்லாம் சமைக்கப்பட்ட வகைகளைக் காட்டிப் பின், "ஒப்பற்றவரை நாம் இப்போதே விரைந்து அமுது செய்விப் போம் " என்று கூற, உணர்வினால் உணரமுடியாத ஒருவராகிய அவரை உணர்த்தும் பொருட்டு அவர் பக்கலில் அணைய முன்னே சென்று நின்றுகொண்டு நாயனார் அங்கே அவரைத் துயிலிலிருந்து எழுப்ப நினைத்தார்.

24) "அடியேன்அழுத்தியுள்ள இடரினின்றும்நீங்கி உய்யும்பொருட்டாகவே என்பாற்கருணை கூர்ந்து எழுந்தருளியுள்ள பெரியோரே ! இங்கு விரைவிலே எழுந்து அமுது செய்தருளுக" என்று அடித்தொண்டு பூண்ட நாயனார் சொன்னபொழுது, அடியவராய் வந்த அவர் ஒரு சோதிப் பிழம்பாய் எழுந்து

தான்றவே, மனைவியும் நாயனாரும் திகைத்து நின்றனர்.

25) திருமாலுக்கும் பிரமனுக்கும் அரியவராகிய நாதர் ஒரு சோதியாய்த் தோன்றவே, அது கண்டு மயங்கி நின்ற திருத்தொண்டர்க்கு உணர்த்தும் பொருட்டுச் சங்கரனார் தாமே மகிழ்ந்தவராகி, வாசனை பொருந்திய நீண்ட கூந்தலையுடைய உமாதேவியாருடனே இடப வாகனத்தின் மீது வெளிப்படக்காணும்படி எழுந்தருளி வந்து சீலம் பொருந்திய அடியார் பூசையினைச் செய்து வந்த நாயனாரைநோக்கி .

26) "அன்புடையவனே ! அன்பர்களுடைய பூசையினைச் சிறிதும் வழுவாது காத்துச் செய்து வந்த நீ, உன் மனைவியோடும் எம் பேருலகத்திலே சேர்த்து, குபேரன்தானே முன்னர்ப் பெரு நிதிகளை ஏந்தி, உன்சொல் வழியே ஏவல் கேட்டு நிற்க, இணையில்லாத பேரின்பம் நுகர்ந்து கொண்டு நித்தியமாய் வாழக்கடவாய் " என்றே யாருக்கும் மிக்காராகிய சிவபெருமான் அருளிச்செய்தார் .

© KTBS NOT TO BE REPUBLISHED

அருஞ்சொற்பொருள் :

வளம்-செழுமை ; பத்தி-பக்தி ; மதுரப்பதம்-இனியமொழி ; அல்லல்-துன்பம் ; நல்குரவு-தரித்திரம் ; ஒல்லை-விரைவு ; மால்-விட்டுணு ; அயன்-பிரமன் ; மாரி-மழை ; மாற்றம் சொல், உரை; தாரிப்பு-ஆதரவு ; அன்னம்-உணவு ; ஏதிலார்-பிறர் ; மல்லல்-செழிப்பு ; அமுது-உணவு ; இடா-இறைகூடை ; வெந்தழல்-எரி(நெருப்பு) ; அலக்கு-கூரை ; குறு பயிர்-சிறிய இலைக்கறிப் பயிர் ; கொழுநர்-கணவர் ; இருநிதி-பெருநிதி ; மொழி-சொல் .

பயிற்சி

I. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக .

1) சிவபெருமான் எவற்றை அணிந்திருப்பார் ?
2) இளையான்குடிமாற நாயனார் எதனைத் திருப்பணியாகச் செய்து வந்தார் ?
3) சிவ பெருமான் எவ்வேடத்தில் இவ்வுலகம் உய்ய எழுந்தருளினார்?
4) இளையான்குடி மாறர் பெரிய இறைகூடையில் எதனைக் கொணர்ந்தார் ?
5) இளையான்குடி மாறரின் மனைவி அடுப்பிலே நெருப்பு மூட்ட எதனைப் பயன்படுத்தினார் ?
6) இளையான்குடி மாறர் கறிக்காக எதனைப் பறித்தார் ?

II. மூன்று வாக்கியங்களில் விடை தருக .

1) இளையான்குடி மாறர் விருந்தினராகிய தபோதனரை வரவேற்று உபசரித்தமையைக் குறிப்பிடுக .

2) இளையான்குடி மாறர் தபோதனர் பசி தீர்க்கும் வழியினைக் கேட்க, அவர் மனைவி விடுத்த விடையினைக் கூறுக .

III. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக .

1) இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார் வடிவில்வந்த சிவனுக்கு அமுது படைக்க, சமைப்பதற்காக மேற்கொண்ட செயல்களை விளக்குக.

IV. இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக .

1) ‘ ஏதிலாருமினித் தருவாருமில்லை
போதும் வைகிற்றுப் போம்இடம் வேறிலை ’

2) ‘குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப்பாசம்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்குநல்க’

மொழிப் பயிற்சி

1) சேர்த்து எழுதுக .

வரும் + எல்லை

மற்று + அவை

யாவர் + ஆயினும்

சுவை + திறன்

2) பிரித்து எழுதுக .

மல்லனீடிய

வளஞ்சுருங்க

மாரிக்காலம்

இன்னமுதூட்டு

3) எதிர்ச்சொல் தருக .

செல்வம்

அன்பு

நிறை

அந்தம்

இன்பம் .

@KTBS
NOT TO BE REPUBLISHED

யிற்சி

அ) I. கோடிட்ட இடங்களை நிரப்புக .

1) முளிதயிர் பிசைந்த _______ மெல் விரல் .

2) இனிது எனக் ________ உண்டலின்

II. ஒரு வாக்கியத்தில் விடை தருக .

1) காந்தள் மலர் போன்ற மெல்லிய விரலால் தலைவி எதனைப் பிசைந்தாள் ?

2) தலைவி என்ன சமைத்தாள் ?

III. ஐந்து வாக்கியங்களில் விடை தருக .

தலைவி உணவு சமைக்க மேற்கொண்ட செயல்பாட்டினையும் உணவினை உண்ட தலைவனின் உணர்வு மற்றும் தலைவியின் மகிழ்ச்சியினையும் கூடலூர்கிழார் வழி நின்று விளக்குக .

IV. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக .

1) நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே .

மொழிப்பயிற்சி

1) எதிர்ச்சொல் தருக .

இனிது

மகிழ்ச்சி

2) வாக்கியத்தில் அமைத்து எழுதுக .

புகை

நுண்மை .

@KTRS NOT TO BE REPUBLISHED

2. புறநானூறு

காளையின் கடன்

ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே .

- பொன்முடியார்
பாடல் எண் 312

நூல்குறிப்பு :

(புறநானூறு = புறம் + நான்கு + நூறு)

புறப்பொருளைக் கூறும் நானூறு பாடல்களைக் கொண்டது. இது சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். பழங்காலத் தமிழரின் பண்பாடு, கலை, நாகரிகம், அரசியல் ஆகியவற்றை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழரின் வரலாற்றுக் கருவூலமாகத் திகழுகின்ற இந்நூல், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழகத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களால் பல்வேறு காலச் சூழலில் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். மறக்குடியில் பிறந்து நல்லிசைப்புலமை பெற்ற புலவர் பெருமாட்டியாகிய பொன்முடியாரால் பாடப்பெற்ற பாடல், இங்கு பாடத்திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது .

அருஞ்சொற் பொருள் :

ஈன்று - பெற்று ; புறம் தருதல் - வளர்த்து விடுதல் ; சான்றோன் - நற்பண்புகள் நிறைந்தவன் ; நன்னடை – நல்லொழுக்கம் ; வேந்தன் - அரசன் ; சமம் - போர் ; களிறு - யானை ; காளை - மகன் ; கடன் - கடமை .

கருத்துரை :

மகனைப் பெற்று வளர்த்து விடுதல் என்னுடைய கடமையாகும். அவனை நற்பண்புகள் நிறைந்தவனாக்குதல் தந்தையின் கடமையாகும். அவனுக்குத் தேவைப்படுகின்ற வேலை வடித்துக் கூர்மையுடையதாகச் செய்து தருவது கொல்லனது கடமையாகும், நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது நாடாளும் வேந்தனின் கடமையாகும். ஒளிவிடுகின்ற வாளைக்

© KTBS NOT TO BE REPUBLISHED

கையிலேந்திச் சென்று தடுத்தற்குரிய போரைச்செய்து களிறெறிந்து வெற்றியோடு மீளுவது காளையாகிய மகனுக்குக் கடமையாகும் .

பயிற்சி

I. கோடிட்ட இடத்தை நிரப்புக .

1) சான்றோனாக்குதல் ______________ கடனே .

2) நன்னடை நல்கல் ________________ கடனே .

II. ஒரு வாக்கியத்தில் விடை தருக .

1) வேலை வடித்துக் கூர்மையாக்கித் தருவது யாருடைய கடமையாகும்?

2) களிறெறிந்து வெற்றியோடு மீளுவது யாருடைய கடமையாகும் ?

III. ஐந்து வாக்கியங்களில் விடை தருக .

தாய், தந்தை, கொல்லன், அரசன் மற்றும் மகன் செய்ய வேண்டிய கடமைகளைப் பொன்முடியார் வழிநின்று விளக்குக .

IV. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக .

1) ஈன்று புறந்தருதலென்றலைக் கடனே .

மொழிப்பயிற்சி

1) சேர்த்து எழுதுக .

புறம் + தருதல்

சான்றோன் + ஆக்குதல்

2) பிரித்து எழுதுக .

நன்னடை

களிறெறிந்து

@KTBS NOT TO BE REPUBLISHED

4. கதிரைமலைப் பள்ளு

கூவாய் குயிலே

மாதவரும் ஞானிகளும் மாமுனிவ ரானவரும்
வானுலகும் வாழவே கூவாய் குயிலே
நீதியுட னேபுவியை யாளுமன்ன ரானவர்கள்
நீடூழி வாழவே கூவாய் குயிலே

தீதகல வேசகல பேர்க்கு நிறை வாயநன்மை
சேரமகிழ் வாகவே கூவாய் குயிலே
காத மெழு கீதமொடு காசிகதி ராபுரியெக்
காலமும் வாழவே கூவாய் குயிலே .

நூல்குறிப்பு :

கதிரை மலைப் பள்ளு இலங்கைக்கும், இந்தியாவிற்கும் உரியது. பள்ளனின் மூத்தப் பள்ளி இலங்கையைச் சேர்ந்தவள். இளைய பள்ளி இந்திய நாட்டைச் சேர்ந்தவள். மூத்தப் பள்ளி கதிர்காம வேலனைக் குல தெய்வமாகக் கொண்டவள், இளைய பள்ளி விநாயகனைக் குல தெய்வமாகக் கொண்டவள் .

© KTBS NOT TO BE REPUBLISHED

ஆசிரியர்குறிப்பு :

ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. திரு சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது .

அருஞ்சொற் பொருள் :

மாதவர் - பெரிய தவத்தை உடையவர் ; ஞானி - அறிவுடையோர் ; சகலபேர்க்கும் - எல்லோருக்கும் ; காத மெழுகீதமொடு – ஒரு காத தூரம் கேட்கும் இனிய குரலொடு ; காசி கதிராபுரி - கதிராபுரி இறைவனான கந்தனைப் போற்றுதல் .

கருத்துரை :

பெரிய தவசிகளும் ஞானிகளும் பெரிய முனிவரும் உயர்ந்த உலகமும் வாழும்படியாகக் கூவுவாய் குயிலே! சம நீதியுடன் பூமியை ஆட்சி செய்பவர்கள் நீண்ட காலம் வாழ்க வென்று கூவுவாய் குயிலே! எல்லோருக்கும் தீமை அகன்று நன்மை சேரும் படியாக மகிழ்ந்து

கூவுவாய் குயிலே! காசி நகருக்கு இணையான கதிராபுரி எக்காலமும் வாழ்கவென்று காத தூரம் கேட்கும் அளவிற்கு இனிய குரலோடு கூவுவாய் குயிலே!

பயிற்சி

அ) I. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :

ஆசிரியர் யார் யார் வாழ வேண்டும் என்று வேண்டி குயிலைக் கூவச் சொல்கிறார் ?

II. இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக :

" காதமெழு கீதமொடு காசிகதி ராபுரியெக்

காலமும் வாழவே கூவாய் குயிலே "

ஆ)மொழிப் பயிற்சி :

1. பிரித்தெழுதுக

மாதவர் ; தீதகல .

2. இணையான சொல் தருக :

வாழ்வு ; நீதி .

3. எதிர்ச் சொல் தருக

நன்மை ; நிறை .

இ) செயல் திறன்

பாடிப் பழகுக .

1. சேரப் புரளத் தரளத் திரளைச்
சிதறித் ததறிச் சிந்துரம்
தியங்கு புனலில் மயங்கித் தியங்கி

2. வானரப் பொருது குயத்தி குறத்தி
வள்ளி கணவன் மலர்ப்பதம்
வழுத்திக் குறிஞ்சி நிலத்தைக் கடந்து
வந்து பாலை யடைந்ததே .

@KTBS NOT TO BE REPUBLISHED

5. பெண்கள் விடுதலைக் கும்மி

1. கும்மியடி ! தமிழ்நாடு முழுவதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி !

(கும்மி)

2. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார் .

(கும்மி)

3. மாட்டையடித்து வசக்கித் தொழுவில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார் அதை
வெட்டிவிட் டோமென்று கும்மியடி !

(கும்மி)

4. கற்பு நிலையென்று சொல்ல வந்தால் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம் !

(கும்மி)

5. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி !

(கும்மி)

- மகாகவி பாரதியார்

@KTBS NOT TO BE REPUBLISHED

நூற்குறிப்பு :

இப்பாடல் ' பாரதியார் கவிதைகள் ' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பெண் விடுதலையையும், புதுமைப் பெண்ணையும் வெளிப்படுத்தும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளது .

சிரியர்குறிப்பு :

பாரதியாருடைய இயற்பெயர் சுப்பிரமணியன் என்பதாகும். இவருடைய ஆறாவது வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்ததால் ' பாரதி ' என்ற பட்டம் பெற்றார். திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தைச் சேர்ந்தவர். தேசியகவி, மகாகவி, முண்டாசு கவி என்றெல்லாம் போற்றப்படுவார். நாட்டு விடுதலையோடு பெண்விடுதலைக்கும் வித்திட்டவர். பாமரரும் படிக்கும் வண்ணம் எளிய சந்த நயத்தில் இவரது பாடல்கள் அமைந்திருக்கின்றன.

அ. பயிற்சி

I. ஒரு வாக்கியத்தில் விடை தருக ;

1. பெண்கள் எவை போயின என்று கும்மியடித்தனர் ?
2. மாய்ந்து விட்டவர்கள் யார் ?
3. பாரதியார் கூறும் விந்தை மனிதர் என்ன கருதினர் ?
4. ' இருகட்சி ' என்பது யாரைக் குறிக்கும் ?
5. கும்மியடிக்கும் பெண்கள் எதனைத் தள்ளி மிதித்தனர் ?

II. மூன்று வாக்கியங்களில் விடை தருக ;

1. பெண்கள் எவ்வாறு கும்மியடித்தனர் ?
2. பெண்கள் எதை வெட்டி விட்டோமென்று கும்மியடித்தனர் ?
3. பெண்கள் பாரினில் எதனை நடத்த வந்தனர் என்று பாரதியார் குறிப்பிடுகிறார் ?

III. பத்து வாக்கியங்களில் விடை தருக :

1. பாரதியார் கூறும் பெண்விடுதலை குறித்த கருத்துக்களைத் தொகுத்து எழுதுக .

IV. இடம் சுட்டிப் பொருள் விளக்குக ;

அ) நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி !

ஆ)" பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் "

ஆ. செய்முறைப் பயிற்சி :

1. பெண் விடுதலை குறித்து சொந்தமாக ஒரு புதுக்கவிதை எழுதுக.

@TTB NOT TO BE REPUBLISHED

6. என் மக்கள்

பசியால் மடிந்தோர் படிக்கல் சுமந்தோர்
வதைத்துச் சிதைந்தோரும் என்மக்களே
கைகால் பிடிப்போர் கைகட்டிக் கொள்வோர்
அடிமையிலும் அடிமையப்பா என்மக்களே
ஏருழுது விதைத்தோர் பயிரறுத்து வியர்த்தோர்
வெய்யிலில் வெந்தழிவோரும் என்மக்களே
வெறுங்கையோடு வந்தோர் பெருமூச்சு விட்டோர்
வாய் வயிற்றைக் கட்டியோரும் என்மக்களே
மாளிகை எடுத்தோர் மாடங்களைக் கட்டியோர்
தாளடிக்கீழ் சிக்கியோரும் என்மக்களே
வீதியிலே வீழ்ந்தோர் நாதியற்றுக் கிடந்தோர்
மனசுக்குள்ளே மருகுவோரும் என்மக்களே
வட்டியே கட்டுவோரும் ஏச்சுகளின் நெருப்பிலே
வெந்து சாம்பலாவோரும் என்மக்களே
பரமனின் புகழ்பாடி பாயசம் உண்டோர்க்கு
கால் செருப்பு தைத்தோரும் என்மக்களே
பொன்னை எடுத்தும் அன்னத்தைக் காணாதார்
ஆடையை நெய்தும் வெற்றுடம்பாய்
சொன்ன சொல் கேட்பாரும் என்மக்களே
காற்றையே உண்பாரும் என்மக்களே

முனைவர்:சித்தலிங்கய்யா.

மொழியாக்கம்; பொன்.க.சுப்பிரமணியன்,

நூற்குறிப்பு :

பெளகாவியில் 2011-இல் நடந்த அகில உலக கன்னட மாநாட்டுக்காக கன்னட மற்றும் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் இக்கவிதை நூல் வெளியிடப்பட்டது. முனைவர்.சித்தலிங்கய்யா எழுதிய கவிதைகளின் தொகுப்பு நூல் இது .

©KTBS NOT TO BE REPUBLISHED

ஆசிரியர்குறிப்பு :

முனைவர்.சித்தலிங்கய்யா சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மனித இனத்திற்காகக் குரல் எழுப்பியவர். நம்மிடையே வாழும் கன்னடக் கவிஞர் தம் பாடல்களின் மூலம் நொந்து போன மக்களின் ஈனக்குரலை வெளிப்படுத்தியவர். உழைப்பாளிகளின் உண்மை நிலையைக் கண்டு உணர்ந்து பாடியவர். இவருடைய கவிதைகள் ‘ என் மக்கள் மற்றும் பிற கவிதைகள்’ (நன்ன ஜனகளு மத்து இதர கவிதெகளு) என்ற தொகுப்பு நூலில் வெளிவந்துள்ளன .

‘என் மக்கள்’ என்ற வடிவில் மொழியாக்கம் செய்தவர் திரு. பொன்.க.சுப்பிரமணியன். இவர் ஆஸ்டின் டவுன் மாநகராட்சி இளநிலைக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் .

அருஞ்சொற் பொருள் :

மடிந்தோர் - இறந்தோர் மருகுதல் ; புலம்புதல் .

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ) I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. நாதியற்றுக் கிடந்தோர் மனசுக்குள்ளே ______ என் மக்களே .
2. மாளிகை எடுத்தோர் மாடங்களைக் கட்டியோர் _______ சிக்கியோரும் என் மக்களே .
3. பொன்னை எடுத்தும் ______ காணாதார் .

II. பத்து வரியளவில் விடை எழுதுக :

1. முனைவர். சித்தலிங்கய்யா உழைக்கும் மக்களை எவ்வாறு படம் பிடித்துக் காட்டுகிறார் ?

III. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக :

1. " கைகால் பிடிப்போர் கைகட்டிக் கொள்வோர் அடிமையிலும் அடிமையப்பா "
2. " பொன்னை எடுத்தும் அன்னத்தைக் காணாதார் ஆடையை நெய்தும் வெற்றுடம்பாய்ப் போவார் "

ஆ) மொழிப் பயிற்சி :

1. பிரித்து எழுதுக :

ஏருழுது ; பயிரறுத்து .

2. சேர்த்து எழுதுக :

வெந்து + அழிவோர் ; வெறுமை + கை .

3. எதிர்ச் சொல் தருக :

வெய்யில் ; வீழ்ந்தோர் .

இ) செயல் திறன்

1. எடுத்துக் காட்டைப்போன்று வேறு பொருள் தரும் தொடரை எழுதுக :

(எ-டு) மடி :

பசியால் மடிந்தோர் எத்தனையோ பேர்

காலையில் எழுந்ததும் போர்வையை மடித்து வை .

படி ____

அடி ____

2. எச்சத்தை முற்றாக மாற்றி எழுதுக :

(எ-டு) கல் சுமந்த மக்கள் (பெயரெச்சம்)

மக்கள் கல் சுமந்தனர் (வினைமுற்று)

வீதியிலே வீழ்ந்த மக்கள் (பெயரெச்சம்)

____________________ (வினைமுற்று)

ஆடையை நெய்த மக்கள் (பெயரெச்சம்)

____________________ (வினைமுற்று)

வாழ்க்கைத்திறன்

1. இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக :

அ. Small rudders guide great ships .

ஆ. A small spark makes a great fire .

இ. Haste makes waste .

ஈ. Do well what you have to do .

@KTBS NOT TO BE REPUBLISHED

3. இன்றைய களாவும் நாளைய பலாவும்

நாளைய
பலாக் கனியை விட
இன்றைய களா, சிறந்த தென்று
எவன் சொன்னான் ?
அது
உனது பலாக்களைப் பறிப்பவன்
ஓதிய பாடம் அல்லவா ?
இன்று
களா என்றால்
எழுதி வைத்துக் கொள்
களா தான் உனக்குக் கதி !
பலா
கனா தான் !
பட்டினி கிட
பலா வையே உண்பதென்று
விரதம் கொள் !
சந்திப்பது சாவா ? – அது
களாவை விட
இனிது .

-ஈரோடு தமிழன்பன்

@KTBS NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

ஈரோடு தமிழன்பனின் "நாம் இருக்கும் நாடு" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. தமிழன்பனின் பல துறைக்கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. புதுக்கவிதைத் துறையில் இந்நூல் சிறந்த இடமும் பரிசும் பெற்றுள்ளது .

ஆசிரியர்குறிப்பு :

ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் 1936-ஆம் ஆண்டில் பிறந்தவர் தமிழன்பன் அவர்கள். இவரின் இயற்பெயர் செகதீசன். இவர் தமிழாசிரியராகப் பணியைத் தொடங்கியவர்; முனைவர் பட்டம் பெற்றவர். இவர் சென்னைத் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றியவர், இவருடைய 'தமிழன்பன் கவிதைகள்' என்ற நூல்

மிழ்நாடு அரசின் (1973) முதல் பரிசைப் பெற்றுள்ளது. 1990-ல் ' பாரதிதாசன் விருது ' இவருக்கு வழங்கப்பட்டது .

அருஞ்சொற் பொருள் :

ஓதிய - படித்த ; கதி - புகலிடம் .

கருத்துரை :

எதிர்காலத்தில் கிடைக்க இருக்கும் " பலா "வைப் போன்ற சுவை மிகுந்த வாழ்வை விட , உடனே கிடைக்க இருக்கும் " களா "வைப் போன்ற புளிப்பான வாழ்வே சிறந்தது என்று எவன் சொன்னான் ? ஏதோ ஒரு வாழ்வு என்பது உனது அருமை முயற்சியால் வரும் பலாவைப்போன்றது இன்சுவை வாழ்வைப் பறிக்க நினைப்பவன் ஓதிய பழமொழிப் பாடம் இது அல்லவா ?

இன்று களாக்காய் போன்ற வாழ்வுதான் என்றாலும் அதுவே போதும் என்று சோம்பலால் விட்டுவிடுவாய் என்றால் உனக்குக் கதியே அக்களாக்காய் வாழ்வுதான் இறுதிவரையிலும் ! பலா என்பது பகற்கனவுதான் ! எனவே முயற்சி செய் ! அம்முயற்சியில் பட்டினியே உனக்குக் கதி என்றாலும் பட்டினிகிட ! எதிர்காலத்தில் பலாவையே உண்பது என்று உறுதியான விரதம் கொள் ! சந்திப்பது சாவுதான் என்றாலும் அது களாவை விட இனிது தான் ! அப்பலாவையே அடைவேன் என்று உம் முயற்சியைத் திருவினையாக்குக .

@KTBS NOT TO BE REPUBLISHED

அ. பயிற்சி

I. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக .

1. ஈரோடு தமிழன்பன் முரண்படும் பழமொழி யாது ?
2. எதனைச் சிறந்தது என்று ஏற்றால் எது கனா ஆகிவிடும் ?
3. பட்டினி இருந்தாவது எதனை உண்ண யாது மேற்கொள்ள வேண்டும் ?
4. கவிஞர் ஈரோடு தமிழன்பன் எதனைக் களாவை விட இனிது என்கிறார்?

I. பத்து வரிகளில் விடை எழுதுக .

1. பலாவை விட களா எவ்வாறு சிறந்தது ?
2. முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தன்மை கூடாது. விளக்குக

III. இடம் சுட்டிப் பொருள் விளக்குக .

1. களாதான் உனக்குக் கதி !
2. பட்டினி கிட பலாவையே உண்பதென்று .
3. சந்திப்பது சாவா ? – அது

   களாவை விட

   இனிது !

ஆ. மொழிப் பயிற்சி

1. பிரித்து எழுதுக

   பலாக் கனி ; உண்பதென்று .

2. படித்தறிக.

   எழுத்து வேறுபடுவதால் பொருள் மாறுபடுதல் .

   பறி - பரி ; களா - கலா ;

பறி - பறித்துக்கொள் (கொள்ளை) ; பரி - குதிரை . களா - ஒருவகைப் பழம் ; கலா - பெண்பாற்பெயர் .

@KTBS NOT TO BE REPUBLISHED

4. இயல்பு

ஜீவன் ஒவ்வொன்றும்
அதனதன் இயல்போடு
ஒட்ட நறுக்கினும்
நன்றியில் நாய்
மொக்கை வாலாட்டும்
வைக்கோல் அடைத்தாலும்
கன்று வருடி
மடி சுரக்கும் பசு
பால் வார்த்தாலும்
விஷம் குறைக்காது பாம்பு .

பஞ்சம் பிழைக்க
வேறுதிசை பறந்தாலும்
கவளம் கண்டதும்
கரையும் காக்கை.
உள்ளங் கைக்குள்
உட்கார வைத்தாலும்
நகரும் காற்று
உதித்தாலும்
மேகம் மறைத்தாலும்
மறக்காமல் கூவும் சேவல்.
ஊசி முனையளவு என்றாலும்
உக்ரம் குறையாது
அக்கினிக் குஞ்சு.
எல்லாம் எல்லாம்
அதனதன் இயல்போடு.

மனிதன் மட்டும் மனிதன் மட்டும்
ஏன் இப்படி ?

மனிதம் தொலைத்து
புனிதம் தொலைத்து!

- ஆண்டாள் பிரியதர்ஷினி

@KTBS
NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

இப்பாடல் ‘ முத்தங்கள் தீர்ந்து விட்டன ’ என்ற கவிதை நூலிலிருந்து எடுக்கப்பட்டது . இந்நூல் ஆண்டாள் பிரியதர்சினியின் கவிதைத் தொகுப்பு ஆகும்.

ஆசிரியர்குறிப்பு :

நிகழ்காலப் பெண்கவிஞர்களில் கவனத்தைக் கவரும் ஒருவராய் ஆண்டாள் பிரியதர்ஷினி திகழ்கிறார். கவனஈர்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கலாச்சார அதிர்ச்சி கொடுக்காமல் மரபுக்கும் (Traditions) பின் நவீனத்துவத்துக்கும் (Post modernism`) இடையிலான ஒரு தனித்தளத்தில் ஆண்டாள் பிரியதர்ஷினியின் கவிதைகள் திகழ்கின்றன .

கருத்துரை :

எல்லா இயல்புகளும் அதனதன் இயற்கைப் பண்புகளோடு இயல்பாய் வாழ்கின்றன .

வாலை ஒட்ட நறுக்கினாலும் நாயின் நன்றி காட்டும் இயல்பு மாறுவதில்லை .

வைக்கோல் அடைத்த கன்று வடிவத்தை வருடிக்கொண்டே பாலை மடியில் சுரக்கும் இயல்பு கொண்டது தாய்ப் பசு .

பால் வார்த்தாலும் பாம்பு தன் விஷத்தைக் குறைக்காத இயல்பு உடையது .

எங்கு பறந்தாலும் சோற்றுக் கவளம் கண்டதும் கூடிஉண்ணும் இயல்புடைய காக்கை. காற்றை இறுக்கிப்பிடிக்க நினைத்தாலும் இயங்கி கொண்டே இருப்பது காற்றின் இயல்பு.

சூரிய உதயத்தை மேகம் மறைத்தாலும் சேவல் கூவ மறக்காது.

நெருப்புத் துகள் ஊசிமுனையளவே என்றாலும் அதன் இயல்பு மாறாதது.

இப்படி எல்லாமே அதனதன் இயல்புகளோடு இருக்கும் போது மனிதன் மட்டும் தனது இயல்பை மறந்தும் மனிதத்தன்மையைத் தொலைத்தும் அதன் புனிதத்தையே மறந்தும் வாழ்கிறானே!

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. I. கோடிட்ட இடத்தை நிரப்புக .

1. ஒட்ட நறுக்கினும் நன்றியில் நாய் மொக்கை ______
2. ______ அடைத்தாலும் கன்று வருடி மடி சுரக்கும் பசு .
3. பஞ்சம் பிழைக்க வேறு திசை பறந்தாலும் ______ கண்டதும் கரையும் காக்கை .
4. ஊசி முனையளவு என்றாலும் ______ குறையாது அக்கினிக் குஞ்சு.

II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக .

1. நன்றி காட்டும் விலங்கு யாது ?
2. பசுவின் இயல்பு பற்றிக் கவிஞர் கூறுவது யாது ?
3. காக்கை கரைவதன் நோக்கம் யாது ?
4. நகரும் இயல்புடைய காற்றை எவ்விடத்தில் அடைக்க நினைத்தார் கவிஞர் ?
5. சேவலின் இயல்பு யாது ?
6. ' இயல்பு ' கவிதையில் மனிதன் தொலைத்தவை யாவை ?

III. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக .

1. பொருந்தா இயல்புடைய இரண்டு உயிர்கள் யாவை ?

IV. பத்து வரிகளில் விடை எழுதுக .

1. இயல்பு கவிதையின் பொருட் சிறப்பை எழுதுக .

V. இடம் சுட்டிப் பொருள் விளக்குக .

1. பால் வார்த்தாலும்
விஷம் குறைக்காது பாம்பு .
2. உக்ரம் குறையாது
அக்கினிக் குஞ்சு .
3. மனிதம் தொலைத்து
புனிதம் தொலைத்து .

NOT TO BE REPUBLISHED @KTBS

ஆ. மொழிப் பயிற்சி

1. பிரித்து எழுதுக .

   உள்ளங்கை ; முனையளவு ; அதனதன் .

2. வாக்கியத்தில் அமைத்து எழுதுக .

   வேறுதிசை ; உள்ளங்கை ;

   ஊசிமுனையளவு ; மனிதம் ; புனிதம் .

இ. செயல்திறன் :

1. எழுத்து மாறு படுவதால் பொருள் மாறுபடுதலை அறிக .

   வாள் / வால் ; குரைக்காது / குறைக்காது ;

   அளவு / அரவு .

@KTBS
NOT TO BE REPUBLISHED

6. மனம் அவாவும் இலங்காவி உரைநடை

- முனைவர். அ. சங்கரி.

M3S9R2

(இயற்கையின் அழகுகளையும் உயிரினங்களின் சிறப்பியல்புகளையும் எல்லா நாடுகளிலும் காணலாம். ஆயினும் இவற்றைப் போற்றிக் காப்பதிலும் அறிவியல் துணையுடன் எவ்வாறெல்லாம் பிறநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து ஈர்க்கலாம் என்பதையும் இக்கட்டுரை வாயிலாக உணரலாம். கண்ணிற்கும் அறிவிற்கும் விருந்தூட்டுவனவாய் இக்கட்டுரைச் செய்திகள் அமைந்துள்ளன.)

இலங்காவித் தீவுகள் மலேசிய நாட்டின் ஒரு பகுதி. இது தொண்ணூற்றொன்பது குட்டித் தீவுகளை உள்ளடக்கியுள்ளது. விண்ணை முட்டிநிற்கும் மலைகளுக்குப் பச்சைக் கம்பளமாய்ப் போர்த்தியுள்ள வெப்பமண்டலச் சதுப்பு நிலப்படர் தாவரவகைக் காடுகளும் (Mangrove Forests) கரும்பச்சை நிறத்தில் காடுகளினிடையே பரந்து கிடக்கும் அந்தமான் கடலும் அழகை அள்ளிக் கொட்டுகின்றன.

பெங்களூர்ப் பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து மூன்றுமணி நேரப் பயணம் செய்தால் மலேசியாவின் தலைநகரமாகிய கோலாலம்பூர் விமான நிலையத்தைச் சென்றடையலாம். அங்கிருந்து எழுபது நிமிட விமானப் பயணத்தின் வாயிலாக இலங்காவியின் பன்னாட்டு விமான நிலையத்தைச் சென்றடைய முடியும். அங்கிருந்து தரைவழியாகச் சென்றால் முப்பது நிமிடங்களில் இலங்காவித் தீவைச் சேரலாம் .

இங்கு தங்குவதற்கு வசதியாகப் பல தங்கும் விடுதிகள் (Resorts) உள்ளன. இங்கு தங்கி ஒவ்வொரு காட்சியையும் காண பயணிகளுக்கென வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சூரிய உதயக்காட்சி :

மலைச்சிகரம் விண்ணைத் தொடவும் விண், முகிலோடு உரசவும் முகில் கடலைத் தொடவும் கடல், கரையிலிருக்கும் கட்டடத்தை மரம் வருடவும் மரத்தில் மந்திகள் அமர்ந்திருக்கவும் சில மந்திகள் தம்தம் குட்டியோடு மரம் விட்டு மரம் தாவவும் மந்திகளுக்கஞ்சிய என்னை மெல்ல காற்று தடவிச் செல்லவும் சூரியன் தனது கிரணங்களால் இலங்காவித் தீவைத் தொட்டுக் கொண்ட காட்சி மனதை மிகவும் கவர்ந்தது.

© KTBS NOT TO BE REPUBLISHED

இரும்பு வடக்கார்ப் பயணம் : (cable car travel)

ஒரு மலையின் சிகரத்திலிருந்து மறுமலையின் சிகரத்திற்குப் பதினான்கு இரும்புவடக் கார்கள் சென்று வருகின்றன. அதில் பயணம் செய்ய ஓர் ஆளுக்கு முப்பது ரிங்கெட்டுகள் (Ringets) கட்டணம். தளத்தைத் தொட்டதும் தானே கதவுகள் திறக்கின்றன. ஒருவர் பின் ஒருவராக ஆறுபேர் அமரும் இருக்கைகள் எதிரெதிராக அமைந்துள்ளன. அதில் ஏறி அமர்ந்ததும் தானே கதவுகள் மூடிக்கொள்கின்றன. பார்க்கக் கண்ணாடிப்பேழை போன்ற தோற்றம். இதில் இருந்துகொண்டு கீழே பார்த்தால் பச்சை வண்ணப் போர்வையாக மலைகளும் காடுகளும் இடையிடையே கரும்பச்சைக் கடல், காடுகளுக்கிடையில் நுழைந்து செல்வது போன்ற தோற்றமும்மெய்மறக்க வைக்கின்றன. மேலே அண்ணாந்து பார்த்தால் நீலவான் குடை விரித்து நிற்க, மேகங்கள் பூப்பந்து போலச்சுற்றி வரும் காட்சி உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவன.

இரும்பு வடக்கார் , அடுத்த மலைச்சிகரத்தை அடைந்ததும் மெதுவாக நின்று கதவுகள் திறக்கின்றன. அதனுள் இருப்போர் இறங்கியதும் மறுமுனைக்குச் செல்வோர் ஏறிக்கொள்வர். இக்கார்கள் அனைத்தும் தாமே இயங்குவன, இயக்குவோர் யாரும் இல்லை. மேலே நின்று பார்த்து இரசிக்கப் பலவசதிகள் மலைஉச்சியில் செய்யப்பட்டுள்ளன. தொலைநோக்குக் கருவி மூலம் கண்ணுக்கெட்டும் தூரம் வரைப் பார்த்து மகிழ வசதிகள் உள்ளன. மேலுச்சியினின்று வான்பாலம் (Sky Bridge) இரண்டு கிலோமீட்டர் தூரம் செல்கிறது. படிக்கட்டுகள் வழியாக ஏறி இறங்கி அப்பாலத்தின் வழியே நடந்து சென்றால் கீழே மலை, காடு, கடல், பலவிதப் பறவைகள் எனக் காட்சி தருகின்றன. இயற்கையழகை நுகர்ந்து மகிழச் செயற்கைப் பாலம் அமைத்துச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்றனர். வாழ்நாளில் இவ்வளவு அழகையும் ஒருசேரக் காண்பதென்பதே ஓரினிய உணர்வே!

©KTBS NOT TO BE REPUBLISHED

படகுப் பயணம் :

அந்தமான் கடலைக் கிழித்துக்கொண்டு பாய்ந்து செல்லும் விசைப் படகுகளில் நான்கு மணி நேரம் பயணிக்கலாம். ஒவ்வொரு முக்கிய இடத்தையும் பார்க்கப் படகை நிறுத்தி வழிகாட்டுகின்றனர். முதலில் தென்படுவது வௌவால் குகைகள் (Bat caves) ஆகும். வௌவால்கள் தொங்கிக் கிடக்க இயற்கையிலேயே செதுக்கியதுபோன்று அமைந்த குகைகள் படிவியற் படுகைப் பாறைகளால் (Sedimentary Rocks) ஆனவை.

அவற்றில் சைகாஸ் (Cycas) மரங்கள் தொங்கிக் கொண்டிருக்கும். சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருண்ட குகைக்குள் கைமின் விளக்கைப் (Torch) பிடித்துக்கொண்டு நடந்து மிதவைப் பாலம் வழியாகக் கடந்தால் மரங்கள் அடர்ந்த காட்டைச் சென்றடையலாம். நாங்கள் ஆறுபேர் சென்றதால் அச்சமின்றிச் சென்றோம். ஆயினும் இருட்டில் நடக்கும் போது அச்சம் அடி மனதை வருடிச் சென்றது. சைகாஸ் என்னும் ஒருவகைத்தாவரங்கள் பல நூற்றாண்டுகள் வாழும் சிறப்புமிக்கன. இவை அந்தப் பாறைகளில் வளைந்து ஊஞ்சல்போல் தொங்கும் காட்சி அருமையானது. இந்தத் தாவரங்கள் தொண்ணூற்றைந்து வகைகளாய் இருப்பதாக அறிவியல் செய்திகள் கூறுகின்றன. இவற்றுள் சில வகைகளை இங்கே காண நேர்ந்தது . (வலைத்தளம் காண்க)

முதலைக்குகை :

அடுத்து முதலை போன்ற தோற்றமுடைய குகை (Crocodile cave) வழியாகப் படகு சென்றது. அதைத் தாண்டிச் சென்றால் கழுகுகள் தங்குமிடம். கோழியின் தோல்களைக் கடலில் எறிந்துவிட்டுப் படகில் ஒருவித ஒலியை ஏற்படுத்தியதும் பல கழுகுகள் பறந்துவந்து தண்ணீரில் பாய்ந்து கோழித்தோல்களைக் கொத்திச் செல்கின்றன (Eagle Feeding). அருகில் நீர் ஓணான் (Monitor Lizard) பெரிதாகப் பாம்பு போன்று நீரில் மிதந்துசென்று கொண்டிருந்தது. படகுச் சவாரி செய்ய ஒருவர்க்கு ஐம்பது ரிங்கெட்டுகள் கொடுத்தால் ஏறக்குறைய மூன்று மணிநேரத்திலிருந்து நான்கு மணி நேரத்திற்குள் பல மைல்கள் பயணித்தால் இரு மலைகளுக்கிடையிலும் காடுகளுக்கிடையிலுமாகப் படகிலிருந்த வண்ணம் இயற்கை அழகைக் கண்டு களிக்கலாம் .

கடலினுள் மீன்காட்சியகம் :

ஒவ்வொரு வகைமீன்களையும் தனித்தனி வலைக்குள் விட்டு, வலைகளைக் கடல் நீரில் தொங்கவிட்டுள்ளனர். பலகைகளால் பாலம் போன்று அமைத்து நடக்க வழி அமைத்துள்ளனர். ஒவ்வொரு வலைக்குள் இருக்கும் மீன்கள் ஒவ்வொரு வகைத் திறனைப் பெற்றுத்திகழ்வன. அவை ஒவ்வொன்றும் அழகாலும் வடிவாலும் செயலாலும் பயணிகளை மகிழ்விக்கின்றன. ஆர்ச்சர் மீன் (Archer Fish) மூன்று மீட்டர் உயரத்தில் ஒட்டி வைத்திருந்த ரொட்டித் துண்டைக் குறிவைத்துத் தண்ணீரைப் பீய்ச்சி அடித்துக்கீழே விழ வைக்கின்றது. திரும்பத்திரும்பக் குறிதவறாமல்

NOT TO BE REPUBLISHED @KTBS

இவ்வாறு செய்வது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. கைவிரலில் ரொட்டியை நனைத்து வைத்துக் காண்பித்ததும் ஒரே துள்ளலில் மேலெழுந்து குதித்து அந்த ரொட்டித் துண்டினை எடுத்துச் செல்கிறது, தொட்டாலே நழுவும் தன்மையுடையது (Sting-ray) *(ஸ்டிங்க்ரே)* . பர்குடா மீன் கையால் தொட்டால் விரலைத் துண்டிக்கும் அளவு ஆபத்தானவை. பாம்பின் தோற்றத்திலான மீன்கள் ஒரு வலையில் சுற்றி வரும். பல்வேறு விதமான அழகழகான நண்டுகளையும் இங்கே காணலாம் .

இலங்காவியின் கீழுலக விந்தை :

இந்த அருங்காட்சியகத்தில் ஆமை வகைகள், நண்டு வகைகள், பலவண்ண மீன்கள், பாம்புகளின் காட்சி, குட்டித் திரையரங்கம் என்று ஓர் உலகமே பூமிக்கடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குரிய அனுமதிச்சீட்டு ஒருவருக்கு முப்பத்தெட்டு ரிங்கெட்டுகள். பல நிலைகளாக தூயநீர்ப்பிரிவு (Fresh Water Section) கடல்நீர்ப்பிரிவு (Sea Water Section), திறந்த வெளி நீர்ப்பிரிவு (open water section) என்று பலவற்றைக் காணக்குறைந்தது ஆறு மணிநேரம் ஆகும். அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் உறைய வைக்கும் நாலாயிரம் மீன் வகைகள்; ஒவ்வோர் வகையும் ஒவ்வோர் கண்ணாடிப் பேழைக்குள்; ஒவ்வொன்றின் செயல்பாடும் வேறுவேறு; நிறமும் வேறுவேறு. அத்தனை அழகழகு. நீர்வாழ் உயிரினங்களைக் கண்டுவிட்டு வெளியே வரும் வழியில் ஒரு குட்டித்திரையரங்கில் முப்பது நிமிடக் குறும்படம் (documentary) ஓடும். இந்த நீருலுக வாழ்வினங்களைப் பற்றிய விளக்கப் படம் ஓடுவதைக் கண்டு வெளியே வந்தால் பாம்புகளை வைத்து நிகழ்த்தும் நிஜக்காட்சி நடந்து கொண்டிருக்கும். மலைப்பாம்பு, நாகப்பாம்பு, பச்சைப் பாம்பு எனப் பலவகைப் பாம்புகளை மாற்றி மாற்றி உடலில் சுற்றிக் கொண்டு அவற்றிற்கு முத்தம் கொடுத்தும் தடவியும் மற்றவர்களைத் தொடவைத்தும் அஞ்சவைத்து மகிழ்வித்த காட்சி, கண்கொள்ளாக் காட்சி .

சூரியன் மறையும் நேரம் வருமுன் மகிழ்வுந்தில் பயணித்து சுமார் 13000 அடி உயர மலைச் சிகரத்தை அடைந்தோம். அப்போது சூரியன் பொற்கிண்ணமாய்ச் சுற்றிலும் செங்கதிர்களைப் பாய்ச்ச, மேகம் கரும்புகை கக்க, காற்று சூறாவளியாய் அடிக்க, குளிர் உடலுக்குள்ளே ஊடுருவ, சூரியன் மறையும் அழகோ அழகு. இதனை இரசித்துக் கொண்டே சற்று *அமர்ந்து இளைப்பாறி மலையுச்சியினின்று தரைக்குப் புறப்பட்டோம். புறப்பட்ட ஒரு மணி நேரத்தில் கடற்கரையை அடைந்தோம். அங்கு அலைகள் இசைபாட மரங்கள் அசைந்தாட, காற்று தாலாட்ட*

© NOT TO BE REPUBLISHED

நிழற்குடைகளின் கீழ் அமர்ந்து இருளோடு கலந்த கடற்கரைக் காற்றை நுகர்ந்தோம்.

அழகான இலங்காவித் தீவுகள் இயற்கை எழில் கொஞ்சுவன. அந்த இயற்கை அழகைக்கெடாமல் பாதுகாத்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் செல்கின்றனர். இதனால் அந்நாட்டுக்கு அந்நியச் செலாவணி நிறையவே கிடைக்கிறது. நாமும் நமது நாட்டு இயற்கை அழகினை மெருகுபடுத்தி மாசுபடாமல் காத்தால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்க வாய்ப்புகள் அதிகமாகும் .

நூல்குறிப்பு :

‘ அயல் மண்ணின் அற்புதங்கள் ’ என்ற நூலில் இருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது. இந்நூலில் அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா முதலான பல நாடுகளின் பயண அனுபவங்களை ஆசிரியர் விளக்கி எழுதியுள்ளார் .

ஆசிரியர் குறிப்பு :

இக்கட்டுரை ஆசிரியர் முனைவர் அ. சங்கரி அவர்கள் பெங்களூரில் உள்ள மகாராணியார் கலைக் கல்லூரியில் தமிழ்துறைத்தலைவராகப் பணியாற்றினார். மல்லேசுவரம் முதல்நிலைக் கல்லூரியில் கல்லூரி முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது சிறுகதைத் தொகுப்புகள் வாரிசு, விதி, ஒற்றைக்காளை முதலியன. இவரது திறனாய்வு நூல்கள் பெரிய புராணத்தில் உவமைகள், இலக்கியச் சங்கமம், நாயன்மார் கதைகள் என்பன. ‘ நாயன்மார் கதைகள் ’ என்னும் நூல் தமிழக அரசு இலக்கியத் திறனாய்வு விருது, தமிழ்நாடு கலை இலக்கியப்பெருமன்ற விருது, அனைந்திந்திய தமிழாசிரியர் மன்ற 42 –ஆம் கருத்தரங்க விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளது .

அருஞ்சொற்பொருள் :

உதயம் - தோற்றம் , விண் - வானம் , முகில் - மேகம் , மந்தி – பெண்குரங்கு , சிகரம் - உச்சி , பேழை - பெட்டி , அச்சம் - பயம் , எழில் - அழகு , மாசு- அழுக்கு, குப்பை ; நுகர்தல் - அனுபவித்தல் , ரிங்கெட் - மலேசிய நாணயம் .

©KTBS NOT TO BE REPUBLISHED

அ. பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க :

1. மலேசியாவின் தலைநகரம் ________

அ) சிங்கப்பூர் ஆ) கோவை

இ) கோலாலம்பூர் ஈ) இலங்காவி .

2. படகுப் பயணத்தில் முதலில் தென்படுவது _______

அ) படிவியற் படுகைப் பாறை ஆ) இருண்டகுகைகள்

இ) கைமின்விளக்கு ஈ) வெளவால் குகைகள் .

II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. ஒரு மலையின் சிகரத்திலிருந்து மறுமலையின் சிகரத்திற்கு ______ ______ சென்று வருகின்றன .

2. முதலைக் குகையைத் தாண்டிச் சென்றதும் கடலில் _______ _______ எறிந்தால் பலகழுகுகள் அவற்றைக் கொத்திச் செல்கின்றன .

3. ________ _______ மூன்று மீட்டர் உயரத்தில் ஒட்டி வைத்திருந்த ரொட்டித் துண்டைக் குறி வைத்துத் தண்ணீரைப் பீய்ச்சி அடித்து கீழே விழ வைக்கின்றது .

III. பொருத்துக :

1. இலங்காவித் தீவுகள்	மீன்
2. ஆர்ச்சர்	95
3. சைகாஸ் தாவரவகைகள்	சூரியன்
4. பொற்கிண்ணம்	99

IV. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. இலங்காவித் தீவுகள் எந்த நாட்டின் பகுதி ?
2. இலங்காவியில் உள்ள தீவுகள் எத்தனை ?
3. மலேசியாவின் தலைநகரம் எது ?
4. இரும்புவடக்கார்ப் பயணம் மேற்கொள்ளக் கட்டணம் எவ்வளவு?
5. சைகாஸ் என்னும் தாவரங்களில் எத்தனை வகைகள் உள்ளன ?

@KTBS NOT TO BE REPUBLISHED

V. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக ;

1. வௌவால் குகைகள் எவ்வாறு காட்சி அளிக்கின்றன ?
2. சைகாஸ் என்னும் தாவரங்களின் சிறப்பினை எழுதுக ?
3. முதலைக் குகையின் சிறப்பம்சம் என்ன ?
4. சூரியன் மறையும் காட்சியை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கிறார்?

VI. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :

1. சூரிய உதயத்தை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கிறார் ?
2. இரும்புவடக் கார் பயணம் பற்றி ஆசிரியர் கூறுவன யாவை ?
3. இலங்காவியில் படகுச்சவாரி செய்து கண்டு மகிழும் காட்சிகள் யாவை ?

VII. பத்து வரிகளில் விடை எழுதுக :

1. மீன்காட்சியகத்தின் சிறப்புகளை விளக்குக .
2. இலங்காவியின் கீழுலக விந்தைகளை விவரி .

VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

1. ஒருவர்பின் ஒருவராக ஆறுபேர் அமரும் இருக்கைகள் எதிரெதிராக அமைந்துள்ளன .
2. இயற்கை அழகை நுகர்ந்து மகிழ செயற்கைப் பாலம் அமைத்துச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்றனர் .
3. ஓர் உலகமே பூமிக்கடியில் அமைக்கப்பட்டுள்ளது .

ஆ. மொழிப் பயிற்சி

1. எதிர்ச் சொல் தருக :

தோற்றம் x; இயற்கை x; மகிழ்வு x.

2. இணைச் சொல் தருக :

பரந்து –

3. சொற்றொடரில் அமைக்கவும் :

பச்சைக் கம்பளம் ; கடற்கரைக்காற்று ; தங்கும்விடுதிகள் .

© KTBS NOT TO BE REPUBLISHED

. **தன்வினையைப் பிறவினையாக மாற்றுக ;**

அமர்ந்து ; இயங்கு

இ. செயல்திறன் :

1. பாடத்தில் வந்துள்ள உவமைத் தொடரை எடுத்தெழுதுக .
2. நீங்கள் சென்று வந்த சுற்றுலாவைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக .
3. பாடத்தில் பயின்று வந்துள்ள அடுக்குத் தொடர்களை வரிசைப்படுத்தி தொடர்களில் அமைத்துப் பழகுக .

@KTBS
NOT TO BE REPUBLISHED

7. ஒரு செய்தி

- கி. ராஜநாராயணன்.

J6Q4Y9

(இக்கதை நாட்டின் முதுகெலும்பாக உள்ள விவசாயம் அலட்சியப்படுத்தப்படுவதை உணர்த்துகிறது. குழந்தைகள் தங்கள் குழந்தைப் பருவ இன்பங்களைத் தொலைத்துவிட்டு எந்திரங்களாக உழைப்பதையும், கரிசல் காடுகள் கான்க்ரீட் காடுகளாக மாறிவரும் நிலையையும் இக்கதை உணர்த்துகிறது. இளம் தலைமுறையினர் விவசாயத்தைப் போற்ற வேண்டும் ; இந்தியாவின் ஆதாரம் கிராமம் தான் என்பதை உணர வேண்டும் என்பதே இப்பாடத்தின் நோக்கம் ஆகும்) .

நாலுமணி, அதிகாலை ஆழ்ந்த தூக்கத்திலிருந்த கிராமத்தின் காதுக்குள்ளே குடைக் கம்பியை விட்டுத் திருகியதைப் போல நாராசமாக " ஹாரன் " பிளிறல்; வடக்குத் தெருவில் ஒன்றும் தெற்குத் தெருவில் ஒன்றுமாக .

முன்னாலெல்லாம் அதிகாலை வேளைகளில் பட்சிகளின் இனிய ஒலிகளைக் கேட்டுத் தான் கிராமம் விழித்தெழும், கோழி கூப்பிடும் குரல் கூட இப்பொழுது மறந்து போய் விட்டது !

பரத்வாஜம் என்கிற கரீச்சான், ஆக்காட்டிக்குருவி, அக்காக் குருவி என்றெல்லாம் பெயர் சொல்லி அழைத்த பறவைகளின் ஒலிகளெல்லாம் இப்போதும் ஒலிக்கத் தான் செய்கிறது. என்றாலும் அதையெல்லாம் மறந்து ரொம்ப நாளாச்சு .

நாலு மணி ஆகவேண்டியது, தீப்பெட்டி ஆபீஸ் பஸ்கள் வந்து கத்தத் தொடங்கிவிடும்

சுருண்டு படுத்துக் கொண்டு கோடுவாய் வழிய அசந்து தூங்கிக் கிடக்கும் பெண் குழந்தைகள் சூட்டுக்கோலால் ஈரலில் சூடுபோட்டது போலப்பதறி எழுந்திருந்து, கொஞ்சநேரத்துக்கெல்லாம் ஒருகையில் எவர்சில்வர் தூக்குச் சட்டியும் மறுகையில் ஒரு சிறிய டப்பாவுமாகப் புற்றுக்குள் எறும்புகள் நுழைவது போல வரிசையாக பஸ்சுக்குள் போய் அடைவார்கள் .

தீப்பெட்டிக்குள்ளே குச்சிகளை அடுக்குகிறதைப் போல அந்தப் பிள்ளைகளைத் தனக்குள்ளே அடுக்கிக் கொண்டு, வயிறு புடைக்கத்

©KTBS NOT TO BE REPUBLISHED

ன்று முடித்த ஒரு ராட்சசன் விடும் ஏப்பம் போல ஹாரன் ஒலியை எழுப்பிக் கொண்டே நகரத்துக்குப் போகும் அந்த பஸ்கள் .

அடுத்த காட்சி . . .

வீடுகளிலிருந்து எருமைகளைப் பால் பண்ணைக்கு ஓட்டிக் கொண்டு போகும் சத்தங்கள் எழுத முடியாத - எழுத்தில் வராத – சொல்லத்தான் முடிகிற சப்தங்கள் அவர்கள் வாயிலிருந்து வருகின்றன. சக மனிதர்களை நோக்கி வைவதைப் போலவே அவர்கள் மாடுகளையும் வைகிறார்கள், கூட்டுறவுப் பால் பண்ணை டெப்போவும் தனியார்ப் பால் பண்ணையைச் சேர்ந்தவர்களும் பால் மாடுகளிடம் ஓடி ஓடிக் கறக்கிறார்கள். இங்கே உள்ள பாலையெல்லாம் டவுனில் கொண்டு போய்ச் சேர்ப்பதில் அவர்களுக்குள் அப்படி ஒரு போட்டி.

இப்போது வேகமாக விடியல் ஒளி பரவிக் கொண்டு வருகிறது. கிராமத்தின் பரம்பரைத் தொள்ளாளி'களான தச்சாசாரிகளும், கொல்லாசாரிகளும் தூக்குச் சட்டிகளில் சோற்றை எடுத்துக் கொண்டு டவுன் பஸ்ஸைப் பிடிக்கத் தயாராகிறார்கள். அவர்களோடு விறகு வெட்டுகிறவர்கள், கொத்தனார்கள், சித்தாள்கள் இதுபோக மற்றக் கூலி வேலை செய்கிறவர்களும் நகரத்தில் போய்த் தினப்படி வேலை பார்த்து வர டவுன் பஸ்சுக்காக காத்திருக்கிறார்கள், நகரத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் கூலித்தொகை கிராமத்தில் கிடைக்காது. கொடுக்கக் கட்டாது – ஆகவே அவர்கள் கிராமத்தில் வசித்தாலும் கிராமத்தைக் கைவிட்டு அநேக வருஷங்கள் ஆகின்றன .

தெருக்களில் ஒரு பெண் பிள்ளையைக் காணோம்.

வயசுக்கு வந்த பெண்கள் மட்டுமே வீட்டுக்குள் உட்கார்ந்து கொண்டு உடம்பை முன்னும் பின்னும் ஆட்டிக் கொண்டே வேகமாகத் தீப்பெட்டி ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள் .

இவர்கள் மீது வெயில் பட்டுப் பல வருஷங்கள் ஆகின்றன, அரங்கு வீட்டின் இருட்டில் வளர்க்கப்பட்ட முளைப்பாரிப் பயிர்கள் போல் வெளுத்துக் காணப்படுகிறார்கள் .

காலையிலிருந்து, மாலையும் கடந்து இருட்டுகிறவரை உள்ளே உட்கார்ந்து ஒட்டுகிற இவர்கள், வெளிச்சத்துக்காகத் தெருவிளக்கடிக்கு வந்து உட்கார்ந்து ஒட்டும் போது மட்டும்அவர்கள் மீது கொஞ்சம் வெளிக் காற்று படும் .

NOT TO BE REPUBLISHED ©KTBS

அந்த கிராமத்தில், மீதி இருக்கும் இளைஞர்கள்... அதாவது வெளிநாடுகளுக்கும் வெளி மாநிலங்களுக்கும் போனவர்கள் போக., மற்ற இளைஞர்களின் கால்கள் இந்த மண்ணின் மீது தான் இருந்தாலும் மனசு ‘ வெளியே ’ தான் இருக்கிறது .

அவர்களுடைய கனவுகளும் கற்பனைகளும் துபாய், குவைத் முதலிய அரபு நாடுகளில் தான் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன .

அவர்கள் ஒவ்வொருவரின் பாக்கெட்டுகளிலும் பாஸ்போர்ட்டுகள் தயாராக இருக்கின்றன. ஒரு விஸாவுக்காக மட்டுமே காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் நிலத்தின் பக்கம் போய் அநேக நாட்களாகிவிட்டன. ஆனாலும் இன்னும் சில பைத்தியக்கார விவசாயிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஒன்றிரண்டுபேர் ! விடிந்ததும் களையெடுக்க ஆட்கள் கிடைக்கமாட்டார்களா, பருத்தி எடுக்க ஆள் கிடைக்க மாட்டார்களா ? என்று ஊருக்குள் தட்டுத் தட்டாய் ஆட்களைத் தேடி அலைகிறார்கள். இவர்களுக்கு என்ன பைத்தியமா ? வெயிலில் போய்ச் சாக இங்கே யாருக்காவது கோட்டியா பிடித்திருக்கிறது ! நிலங்களெல்லாம் உறங்க ஆரம்பித்து பல வருஷங்கள் ஆகிவிட்டன சும்மா ஒண்ணு ரெண்டு கிழடு கெட்டைகள் தாம் மனசு பிடிக்காமல் லபோ லபோ என்று அலைந்து கொண்டிருக்கின்றன .

இன்னும் சில வருஷங்களில் இந்தக் கரிசல் காடு பூராவும் நிஜமாகவே ஒரு வனம்போல ஆகிவிடும். ஆயிரம் வருஷத்துக்கு முன்னால் எப்படி இருந்ததோ அப்படி ஆகிவிடும். பழையபடி ஓநாய்கள், கரடி, புலி என்று உண்டானாலும் உண்டாகலாம் .

பருத்தி விளையும் காடுகளெல்லாம் வனங்கள் ஆகிக்கொண்டு வருவதால் வித்தியாசமான ஒரு வனமகோத்ஸவம் கொண்டாடலாம். வனப்பெருக்கினால் மாதம் மும்மாரி கட்டாயம் மழை பெய்யும், இப்படி மும்மாரியாகவும் தொடர்ந்து மழை கொட்டிக்கொண்டே இருந்தால் .... தீப்பெட்டி ஆபீஸ் வேலை பாதிக்கப்படுமே; "அப்போ என்ன செய்கிறது ? " என்று ஒரு கேள்வி " அதை அப்போ பார்த்துக்கிடலாம்; அதெப்பத்தி என்ன இப்போ ? " என்பது அதுக்குப் பதில் .

அந்தக் கிராமத்தில் பள்ளிக் கூடத்துக்குப் படிக்கப் போகிற குழந்தைகளின் எண்ணிக்கை ரொம்பவும் குறைந்து விட்டது; அதிலும் முக்கியமாகப் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை ரொம்பக் குறைந்து விட்டது .

@KTBS NOT TO BE REPUBLISHED

சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டங்கள் என்றெல்லாம் வந்திருக்கின்றன .

பெயருக்குக் கொஞ்சம் நிலம் இருந்தால் போதும் .

நிலம் கிடைக்கிறதும் இப்போ ஒன்றும் கஷ்டமில்லை; சாகுபடி நிலங்களெல்லாம் தரிசு விழுந்து கொண்டு வருகிற இப்போது நிலம் பெறுகிறதா கஷ்டம் ?

இந்தத் திட்டங்களின் கீழ் பால் மாடுகளும் ஆடுகளும் வந்து கிராமத்தில் லாரி லாரியாக இறங்கிக் கொண்டிருக்கின்றன .

ஒரு காலத்தில் மனிதன், கலப்பையைக் கண்டு பிடிப்பதற்கு முன்னால் ஆடுகளையும் மாடுகளையும் மேய்த்துக் கொண்டு தான் திரிந்தானாம், அந்தக் காலம் திரும்பி விட்டது. விவசாயம் நின்று போய் விட்டது அல்லது வேகமாய்க் குறைந்து கொண்டே வருகிறது .

மேழியைப் பிடித்த கைகள், எருமைமாடு மேய்க்கிற கம்பைப் பிடிக்க ஆரம்பித்திருக்கிறது .

விளை நிலங்களெல்லாம் தரிசு நிலங்களாகவும் மேய்ச்சல் நிலங்களாகவும் மாறிக் கொண்டிருக்கின்றன .

அந்த கிராமத்தின் மாலை நேரக் காட்சிகளை நாம் இப்போது பார்க்கிறோம் .

முன்பெல்லாம் இந்த மாலை நேரத்தில் தெருக்களிலும் அம்மன் கோவில் மைதானத்திலும் குழந்தைகள் ஓடி ஆடும் விளையாட்டுக் கூச்சல்கள் கேட்டுகொண்டே இருக்கும். எத்தனை வகைவகையான கிராமிய விளையாட்டுகள், கற்பனைச் சம்பாஷணைகளோடு கூடிய விளையாட்டுகள், பாடிக் கொண்டே விளையாடும் விளையாட்டுகள். இப்படி அவர்கள் பரம்பரை பரம்பரையாக விளையாடிக் கொண்டு வந்தார்கள் .

அந்தக் குழந்தைகளெல்லாம் இப்போது என்ன ஆனார்கள் ? தீப்பெட்டி ஆபீஸ் வேலைக்காக டவுனுக்குப் பஸ்ஸில் போன குழந்தைகளைத் தவிர இங்கேயும் கொஞ்சம் பாக்கிக் குழந்தைகள் இருக்கத்தான் செய்தார்கள் .

குழந்தைகள் இருக்குமிடங்களில் ஒரு கலகலப்பு இருக்குமே , அது இல்லாததால் நமக்கு இந்த சந்தேகம் வந்தது .

©KTBS NOT TO BE REPUBLISHED

இதோ அவர்கள் !

உட்கார்ந்து காலை நீட்டிக் கொண்டோ, மடக்கிக் கொண்டோ, உடம்பை முன்னும் பின்னும் ஆட்டிக் கொண்டோ தீப்பெட்டியை ஒட்டி ஒட்டி எறிந்து கொண்டே இருக்கிறார்கள். சதா உட்கார்ந்தே இருப்பதாலும் பெருங்கால் பிடித்துக் கொள்வதாலும் அவசரத்துக்கு அவர்களால் எழுந்திருக்க முடியாது ! இதுமட்டும் இல்லை, அவர்களால் பேச முடியாது, சிரிக்க முடியாது; கதைகள் சொல்லி மகிழமுடியாது மனம் திறந்து பாட முடியாது .

அவர்கள் எல்லோரையும் தீப்பெட்டி ஆபீஸ்காரன் பைசாவினால் தரையோடு தரையாக அறைந்து வைத்து விட்டான் !

அவர்களால் செய்ய முடிந்ததெல்லாம் பிசு பிசுக்கும் கஞ்சிப் பசையை விரல்களால் தடவித் தடவித் தீப்பெட்டிகளை ஒட்டுவதும், டிரான்சிஸ்டரில் அதிகபட்சம் எவ்வளவு சத்தம் வருமோ அவ்வளவுக்கு இரைச்சலாகச் சிலோன் ரேடியோவில் ஞானமில்லாத சினிமாப் பாட்டுகளைக் கேட்டுக் கொண்டே இருப்பதுதான் .

பொழுது நன்றாக இருட்டி விட்டது இப்போது,

வீட்டுக்குள் தீப்பெட்டி ஒட்டிக்கொண்டிருந்த பெரியவர்களும், குழந்தைகளும் ஒரு மின்னல் வேகத்தில் உடம்பையும் வயிற்றையும் கழுவிக் கொண்டு தெருவிலுள்ள டியூப்லைட் வெளிச்சத்தை நோக்கி வந்து உட்காருகிறார்கள் , மீண்டும் தீப்பெட்டி போட ,

அதிகாலை நேரத்தில் இங்கிருந்து புறப்பட்டுப்போன தீப்பெட்டி ஆபீஸ் பஸ்கள் ஒவ்வொன்றாய்த் திரும்பி வருகிறது, களைப்போடு வந்து நிற்கிறது .

கரும்புத் துண்டை மென்று சாறை விழுங்கிவிட்டு சக்கையைத் துப்புவதுபோல் அந்த பஸ்கள் வெளியே தள்ளுகின்றன குழந்தைகளை. சில குழந்தைகள் சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டே கையிலுள்ள காலித் தூக்குச் சட்டிகளை வீசிக் கொண்டே பஸ்ஸிலிருந்து குதிக்கிறார்கள். இன்னும் அவர்களிடம் பால்யமும் சந்தோஷமும் மிச்சம் இருக்கின்றன. இப்போது அவர்களெல்லாம் சீக்கிரம் குளித்துச் சாப்பிட்டு விட்டுப் படுக்க வேண்டும். அவர்களுடைய ஒவ்வோர் அசைவிலும் அவசரம், வேகம் தெரிகிறது. கிராமத்தின் மொத்த முகமும் இப்போது தீவிர மௌனமாகிவிட்டது .

@KTBS NOT TO BE REPUBLISHED

நேரம் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது, போர்க்களத்துச் சவங்கள் போல விழுந்தது விழுந்தபடி, கிடந்தது கிடந்தபடி, அலங்கோலமாக அப்படி அப்படியே கிடக்கிறார்கள். மூச்சுப்பிரிதல் ஒன்றே அவர்களை வித்தியாசப் படுத்துகிறது பிரேதத்திலிருந்து. ஆயிற்று! இதோ ஆயிற்று! என்று எந்த நிமிஷத்திலும் எந்த விநாடியிலும் அந்தத் தீப்பெட்டி ஆபீஸ் பஸ்கள் வந்து உரத்த ஒலியில் இவர்களை உலுக்கி எழுப்பலாம் .

பாவம் ! கொஞ்சம் நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும் .

நூல்குறிப்பு :

‘ ஒரு செய்தி ’ என்ற இக்கதை 1982 இல் ‘ அமுதசுரபி ’ தீபாவளி மலரில் வெளிவந்தது. அக்காலகட்டத்தில் கிராமியச் சூழல் எப்படி இருந்தது என்பதை ஒரு செய்தி போல இச்சிறுகதை உணர்த்துகிறது. தீப்பெட்டி தொழிற்சாலைக்குச் செல்லும் குழந்தைத் தொழிலாளர்களின் அவலநிலையையும், விவசாயத்தை மறந்து இளைஞர்கள் நகரத்திற்கும் வெளிநாடுகளுக்கும் போகத் துடிப்பதையும் இக்கதை கூறுகிறது .

ஆசிரியர் குறிப்பு :

‘ கதவு ’ கதை மூலம் தமிழ்ச்சிறுகதை உலகில் அறிமுகமானவர் கி. ராஜநாராயணன் . இவர் கோவில்பட்டியில் உள்ள இடைச்செவல் என்ற கரிசல் மண்ணைச் சேர்ந்தவர். நாற்பது வயதுக்குமேல் எழுதத் தொடங்கிய கி.ரா. சிறுகதை, நாவல், கடிதங்கள், நாட்டுப்புறப் படைப்புகள், வரலாறு, வட்டார வழக்குச் சொல் அகராதி என்று தமிழின் பல்வேறு துறைகளில் நூல்களைப் படைத்துள்ளார். எந்தப் பட்டமும் பெறாத இவரைச் சிறப்பு பேராசிரியராக்கிப் பெருமை பெற்றது புதுவைப் பல்கலைக்கழகம் .

அருஞ்சொற் பொருள் :

பிளிறல் - அலறல் , கரீச்சான் - ஒரு பறவை , கோடுவாய் - ஆழ்ந்த தூக்கத்தில் வடியும் உமிழ்நீர் , சூட்டுக்கோல் - தீக்கோல் , தூக்குச்சட்டி - உணவு எடுத்துச் செல்லும் பாத்திரம் , தொள்ளாளி - தொழிலாளி , தச்சாசாரிகள் - மரவேலை செய்பவர் , கொல்லாசாரிகள் - இரும்பு வேலை செய்பவர்கள் , அரங்கு வீடு – இருட்டறை , தட்டுத்தட்டாய் - கூட்டம் கூட்டமாக (குழுவாக) , கோட்டி - பித்து (பைத்தியம்) , வனம் - காடு ’ மகோத்ஸவம் - திருவிழா , மேழி - கலப்பை , சம்பாஷணை - உரையாடல், பால்யம் - குழந்தைப் பருவம் , மூச்சுப்பிரிதல் - மூச்சுவிடுதல் , சவங்கள் - பிணங்கள் .

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ) I. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக ;

1. முன்பெல்லாம் கிராமம் எதன் ஒலியைக் கேட்டு விழித்தெழும் ?
2. கிராமத்தினர் பெயர் சொல்லி அழைத்த பறவைகள் யாவை ?
3. கி. ராஜநாராயணன் கூறும் கிராம மக்கள் எருமை மாடுகளை எவ்வாறு வைகிறார்கள் ?
4. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் யார் ?
5. கிராமத்துப் பெண்பிள்ளைகள் எவ்வாறு காணப்பட்டதாக கி. ராஜநாராயணன் கூறுகிறார்?

II. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக :

1. கி. ராஜநாராயணன் எந்தக் காலம் திரும்பி வந்து விட்டதாகக் கூறுகிறார் ? ஏன் ?
2. தீப்பெட்டி ஆபீஸில் இருந்து திரும்பிய பஸ்கள் எவ்வாறு குழந்தைகளை வெளியே தள்ளியது ?
3. குழந்தைகள் எவ்வாறு பஸ்சுக்குள் போய் அடைந்ததாகக் கி. ராஜநாராயணன் கூறுகிறார்?
4. குழந்தைகளை ஏற்றிக் கொண்டு பஸ்கள் எவ்வாறு நகரத்திற்குச் செல்லும் ?
5. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் ஏன் கிராமத்தைக் கைவிட்டனர் ?

III. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :

1. கிராமத்துப்பெண்குழந்தைத்தொழிலாளர் பற்றி கி.ராஜநாராயணன் என்ன கூறுகிறார் ?
2. கிராமத்து இளைஞர்கள் பற்றி கி. ராஜநாராயணன் கூறுவன யாவை ?

©KTBS NOT TO BE REPUBLISHED

IV. பத்து வரிகளில் விடை எழுதுக :

1. கிராமத்தில் இருக்கும் ஒன்றிரண்டு விவசாயிகள் குறித்து கி. ராஜநாராயணன் கூறும் செய்தியினைக் கூறுக ?
2. கிராமத்தின் மாலை நேரக் காட்சிகளை கி. ராஜநாராயணன் வழிநின்று விளக்குக ?
3. தீப்பெட்டி ஆபீஸிற்குச் சென்று வரும் குழந்தைகள் பற்றி கி. ராஜநாராயணன் கூறுவன யாவை ?

V. இடம் சுட்டிப் பொருள் விளக்குக ;

1. தெருக்களில் பாண்டி விளையாடக் கூட ஒரு பெண் பிள்ளையைக் காணோம் .
2. அதை அப்பொ பார்த்துக்கிடலாம் ? அதெப்பத்தி என்ன இப்போ?
3. அவர்கள் எல்லோரையும் தீப்பெட்டி ஆபீஸ்காரன் பைசாவினால் தரையோடு தரையாக அறைந்து வைத்து விட்டான் .
4. பாவம் ; கொஞ்சம் நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும் .

ஆ) செய்முறைப் பயிற்சி

1. இச்சிறுகதையில் இடம் பெற்றுள்ள உவமைகளைத் தொகுத்து எழுதுக.
2. இன்றைய கிராமங்கள் எப்படி உள்ளன என்பதை உன்னுடைய சொந்த நடையில் கி. ராஜநாராயணன் எழுதிய ‘ ஒரு செய்தி ’ கதையைப் போல எழுதுக .

NOT TO BE REPUBLISHED @KTBS

S6I7X2

8. கன்னடத்து ஆதிகவி பம்பன்

முனைவர். கே. நாகராஜ்

தமிழாக்கம் : ஆறு சுதாகரனார்.

(காவியம் பாடுவதில் தமிழுக்குக் கம்பன் போல் கன்னடத்திற்குப் பம்பன் : ஆதிகவி என்ற புகழாரத்திற்குரியவர். பாடியது இரு காவியங்களே. ஆனால் அவரது பெருமையோ பெரிது. அத்தகைய புலவரைப் பற்றியும் அவரது படைப்புகளைப்பற்றியும் இக்கட்டுரை விளக்குகின்றது)

கன்னடத்து முதற் கவிஞர் பம்பன். முதன்முதல் இலக்கியமான ஆதிபுராணத்தைப் பாடி கன்னட இலக்கிய வரலாற்றைத் தொடங்கி வைத்திருப்பதால் இவர் ஆதிகவி என்னும் பெருமை பெறுகின்றார். ஆகவே இவரது காலமாகிய 10 முதல் 12ம் நூற்றாண்டு வரையிலான காலக் கட்டத்தை பம்பன் காலம் என்று அழைப்பது வழக்கம். இக்காலம் பொற்காலம், வீர காலம், ஷாத்ர காலம், சமணர் காலம், உரைநடைக் காலம் எனவும் வழங்கப்படுகின்றது. இவருடன் இக்காலத்தில் வாழ்ந்த ஒன்னன், ரன்னன் ஆகியோரையும் சேர்த்து கன்னடத்து மும்மணிகள் என்று பெருமையுடன் அழைப்பது வழக்கம். இம்மூவருமே தமது நூல்களுள் ஒன்றினை அற நூலாகவும் மற்றதைப் பொருள் நூலாகவும் படைத்திருப்பது சிறப்பு.

அன்றைய கீழைச் சாளுக்கிய நாட்டு வேங்கி மண்டலம்! அதனுள் வேங்கிப்பளு என்பதே கன்னடத் தலைக்கவிஞன் என்று கருதப்படுகின்ற பம்பகவியின் சொந்த ஊர். அன்று அங்கு தெலுங்கு மொழி வழக்கத்தில் இருந்தது. இன்று அது ஆந்திர மாநிலத்தில் அமைந்துள்ளது.

இவருடைய தாயாரது சொந்த ஊர் கன்னட மொழி வழங்கி வந்த அண்ணிகேரி, ஆகவே இவருக்கு இயல்பாக கன்னட மொழித் தொடர்பு இருந்துவந்தது. பிற்காலத்தில் இவர் கன்னட நாடான வனவாசிக்குக் குடிபெயர்ந்து, வாழ்ந்து வந்தார். அங்குசத்தால் குத்தித் துன்புறுத்தினாலும் தனது மனம் மீண்டும் மீண்டும் வனவாசியையே நாடும் என்று பாடும் அளவுக்கு அந்நாட்டின் மீது அளவிலா அன்பு கொண்டிருந்தார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

தனது அழகின்மீது இவருக்கு அளவிலாப் பெருமை பொன்வண்ணமேனி; சுருண்டு விளங்கும் மென்மையான முடி; தாமரைமுகம்; உடலின்மென்மை; அன்பும்பண்பும். நிறைந்தபேச்சு; அழகிய எடுப்பான உடை அலங்காரம்; இந்த ஒப்பனைகளுடன் விளங்குவதில் இவருக்கு ஒரு பெருமை; மகிழ்ச்சி! அழகு; மிடுக்கு; உரம்; உறுதி கலந்த உடல்! இவற்றுடன் கூடியது இவரது வடிவம்!

இவர் இராட்டிரகூட வேந்தன் அரிகேசரியின் அவைக்களப்புலவராக விளங்கினார். இவர் சிற்றரசர், அமைச்சர், தளபதி, அந்தரங்க ஆலோசகர் எனப் பல பணிகளை ஒருங்கே செய்தவர்: பல்துறை வல்லுனர். நமக்கு நாமே செய்ய முடியாததைப் பிறர்செய்ய முடியுமா?; கொடுக்க முடியுமா? நடத்தத்தான் முடியுமா? என்ற உறுதியான எண்ணமும் செருக்கும் கொண்டிருந்தார். பாரத காலத்தில் துரியனுக்கும் கர்ணனுக்கும் இருந்தது போன்ற நட்பு இவ்விருவரிடைத்தே நிலவியது. எனவே இவர்'கவிதைப் பண்புகளில் சிறந்தவன்.' என அரிகேசரியால் புகழப்பட்டு பெருமை படுத்தப் படுகின்ற அளவுக்குத் திகழ்ந்தார்.

பம்பகவி இயற்றிய நூல்கள் இரண்டு. முதலாவது ஆதி புராணம். மற்றது விக்கிரமார்ச்சுன விஜயம். முன்னது சமண ஆகமம்: பின்னது பாரதம். முதலாவதை 6 திங்களிலும் அடுத்ததை 3 திங்களிலும் நிறைவு செய்கிறான். இவ்விரண்டுமே வடமொழி நூல்களை மூல நூல்களாகக் கொண்டவை. ஆனால் இவரது படைப்புத்திறமையால் இவை கன்னடத்தில் முதல் இலக்கிய வடிவு பெற்றன. சொல் புதிது; பொருள் புதிது; நடை புதிது; மரபு புதிது; கவிதை புதிது என கன்னட இலக்கிய நெறியில் ஒட்டுமொத்த புதுமைகளைக் கொண்ட மாபெரும் இலக்கியப் புரட்சியின் முடிவே இவ்விரு காவியங்கள். இவை இரண்டும் கன்னட இலக்கிய உலகத்திற்கு அணிகலன் என்பதில் மிகையே இல்லை.

ஆதி புராணம் இவரது முதற் படைப்பு. இந்நூல் சமண தீர்த்தங்கரர்களுள்ஒருவராகிய புருதேவர்குறித்தது. நாற்பொருட்களுள் ஒன்றான அறம் அடிப்படையாய் அமைந்தது. காவிய இலக்கணக் கூறுகளை நூல் வாயிலாய் உணர்த்துவதே கவியின் நோக்கம். சமண சமயம் உலகளாவியது. அச்சமயக் கருத்துக்களைக்காவியம் கற்போர் நெஞ்சில் ஆழமாய்ப் பதிய வைக்க வேண்டும் என்பது நிலைநாட்டப் படுகின்றது.

© KTBS NOT TO BE REPUBLISHED

கன்னட ஆதி புராணம் மூல நூல் வடமொழிப் பூர்வ புராணம். அடிப்படைக் கதையில் இருந்து பிறழாது இந்த வழி நூலைப் படைத்து இருப்பது இவரது சிறப்பு. காவியப் படைப்பு உத்திகளைப் பயன்படுத்திப் பம்பன்தனது திறமையை நிலைநாட்டி இருக்கின்றார். அது மட்டுமல்லாமல் இலக்கிய உலகில் தனக்கென ஒரு தனி இடத்தையும் கொண்டுவிடுகிறார். மூல நூலில் காணப்படும் மூலக் கதைக்குத் தொடர்பில்லாத பகுதிகளை நீக்கி, அழகு கெடாமல் கதையைச் சுருக்கி, காவிய நயத்தைப் பெருக்கி இருப்பது வரவேற்கத்தக்கது.

காவிய இறுதியில் பம்பன் பரதன் பாகுபலி வாயிலாக மனவுறுதியின்சிறப்பை உணர்த்துகின்றார். உடன்பிறந்த பரதனுக்கும் பாகுபலிக்கும் இடையே அரச பதவிக்காக போட்டி நடக்கின்றது; பின்னர் போரும் மூளுகின்றது. இறுதியில் பாகுபலி வெற்றி பெற்றாலும் அவனுக்கு அரசாளும் இச்சை இல்லாததால் அரசாட்சி யைப் பரதனுக்கே தாரை வார்த்துக் கொடுத்துவிடுகின்றான்; சமண தீட்சையை ஏற்றுக்கொள்கின்றான். மனஉறுதிக்கு இரையாக அவன் தனது வெற்றியை விட்டுக்கொடுத்து விடுவதாகக் கதையை முடித்து வைக்கின்றார். 'மனஉறுதி இல்லாமல் உயர் நிலை இல்லை' என்னும் சமண தத்துவத்தை இதன் வாயிலாக நிலை நிறுத்துகின்றார்.

'இச்சை பிறவி அளிக்கும். அது இன்மை வீடுபேறளிக்கும்: உயிருக்குச் சிறப்பையும் அளிக்கும்' என்பது சமண அறம். பம்ப கவி தனது ஆதி புராணத்தின் வழியாக இந்த அறத்தை நிலை நாட்டியிருக்கின்றார்.

இவரது அடுத்த படைப்பு பாரதம். பம்பன் இயற்றியதால் இந்நூல் பம்பபாரதம் என்று வழங்கப்படுகின்றது. இதற்கு இவர் இட்ட பெயர், விக்கிரமார்ச்சுன விஜயம் என்பதாகும். இது ஆசுவாசம் எனப்படும் பதினான்கு பகுதிகளைக் கொண்டது. 1609 செய்யுட்களுடன் உரை நடை கலந்து இருக்கும்படி படைக்கப்பட்டுள்ளது. செய்யுளும் உரையும் கலந்து படைக்கப்படும் இவ்வகை இலக்கியத்தை உரை இடையிட்ட செய்யுள் என்பர். இது கன்னடத்தில் 'சம்பு' எனப்படுகின்றது.

பாரதம் பெரிய கதை. இக்கதையை மாறுபடப் படைத்துள்ள புலவர்கள் அரிது என்று முன்பு பேசிய பம்பனே பின்னர்

© TBS NOT TO BE REPUBLISHED

கவிதைக்கடலாம் வியாச பாரததைச் சுருக்கி மக்கள் மனத்தைக் கொள்ளைகொள்ளும்படி மாறுபடப் படைத்துள்ளமை சிறப்புக்குரியது. மூலக் கதையிலிருந்து மாறுபட்டு சூழ்நிலைக்கேற்ப தனது கதையை மாற்றி அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தனது பாரதக் கதையில் அர்ச்சுனனுக்கு முடிசூட்டு விழா அமைப்பதில் அழகிய மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளமை கருதத்தக்கது. தன்னை ஆதரித்த அரசன் அரிகேசரி தலைமையில் அருச்சுனனுக்கு முடிசூட்டுவிழா நடக்கின்றதாகக் கதை மாறுகின்றது. இந்நிகழ்ச்சி அருச்சுனனுக்குக் கிடைத்த பெருமை என்ற புகழ்ச்சி முன்னிலைப் படுத்தப்படுகின்றது. தன்னைப் புரந்த அரிகேசரியை பாரத காலத்து குருவம்ச மன்னர்களுக்கு மகுடம் சூட்டும் பெருமை பெற்ற வம்சத்தவனாகப் படைத்துத் தனது நன்றிக்கடனைக் காட்டி, அவனை வானளாவச் சிறப்பித்துள்ளமை பாராட்டுக்குரியது.

அருச்சுனனைக் காவிய நாயகனாக்கிச் சிறப்பித்த பம்பன் கண்ணனுக்குப் போதிய சிறப்பளிக்கவில்லை. மாறாக அருச்சுனன் தனது சொந்த வலிமையுடனும் ஆற்றலுடனும் போராடிப் புகழின் உச்சியை எட்டுவதாகப் . இக்கதையில் கண்ணன் பாண்டவர்களது அறிவும் ஆற்றலும் உடையதோர் உற்ற நண்பனாக மட்டுமே படைக்கப்பட்டுள்ளான்.

காவியத்தில் நட்பின் சிறப்பினை உணர்த்த கர்ணன் துரியரது பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. அருச்சுனன் என்ற காவிய மாந்தனுக்கு எதிர் மாந்தனாகப் படைக்கப்பட்டவன் துரியன் அல்ல; கர்ணன்தான். பாண்டவரைக்காக்கும் எண்ணத்தால் கண்ணன் அவனது பிறப்பு உண்மையை அவனுக்குத் தெரிவிப்பதன் மூலம் அவனது வலிமையைக் குன்றுவிக்கின்றான். மேலும் குந்தியின் சந்திப்பால் அவனது வலிமை குறைகின்றது. இந்நிகழ்ச்சிகள் கர்ணனால் பாண்டவருக்கு எந்த ஊறும் நேராத வண்ணம் பார்த்துக்கொள்வதாக அமைக்கப்பட்டுள்ளன. தனது காவியத்தில் கர்ணனது பாத்திரம் மிகவும் இன்றியமையாமையாக இருப்பதால் அதுவே சிறப்புடையது என்பது பம்பனது முடிவு.

பம்ப கவி கன்னடம் வடமொழி ஆகிய இருமொழிப்புலவர். ஆகவே ‘மார்க்கி’ என்னும் வடமொழி மரபையும் ‘தேசி’ எனப்படும் கன்னட மரபையும் தழுவித் தனது காவியத்துக்கான சொற்களைப்

©KTBS NOT TO BE REPUBLISHED

பயன்படுத்தியுள்ளார். தனது படைப்புக்களில் கன்னடத்தின் 'மலிகெரெ' வட்டார மொழியையும் தூய கன்னடச் சொற்களையும் பயன்படுத்திக்கொண்டுள்ளார். இனிமை கூட்டப் போதுமான அளவு வல்லின, மெல்லினச் சொற்களைக் கையாள வல்லவர் பம்பகவி.

ஆயிரம் ஆண்டுகள் கடந்த பின்பும் இவரது செய்யுட்கள் புதுமையுடனும் பெருமையுடனும் விளங்குகின்றன. ஆதிபுராணமும் விக்கிரமார்ச்சுனவிஜயமும்காலம்கடந்தபெருமைபெற்றிருப்பதற்குக் காவிய ஆற்றலே காரணமாய் விளங்குகின்றது. ஆகையால் பம்பன் ஆதிகவி, புது யுகம் படைத்தோன், என்றெல்லாம் புகழப்படுவது ஏற்புடையதாகின்றது.

ஆசிரியர் குறிப்பு : இக்கட்டுரையாளர் முனைவர்திரு கே. நாகராஜ் அவர்கள் பெங்களூரு ராம நாராயண் செல்லாராம் வணிகவியல் கல்லூரியிக்ன்டைத் துறையில் துணைப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். இவரது ''பெங்களூர்புறநகர் மாவட்ட ஊர்ப்பெயர்கள் - ஓர் ஆய்வு'' ''என்னும் ஆய்வுக்கு ஹம்பி கன்னடப் பல்கலைக் கழகம் முனைவர் பட்டம் வழங்கியுள்ளது. 'ஆலோசனெகெ நூறு ஹாதி' என்னும் தலைப்பில் இவரது ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது. இக்கட்டுரை பம்பனை எளிய மக்களுக்கு அறிமுகம் செய்வதற்காக எழுதப்பட்டது.

இதனைத் தமிழாக்கியவர் பேரா. முனைவர். ஆறு. சுதாகரனார். பன்மொழிப் புலவர். கருநாடக மூத்த தமிழறிஞர்களுள் ஒருவர். திருவேங்கடவன் பல்கலைக் கழகம் முனைவர் பட்டம் வழங்கியுள்ளது. பலவேறு நூல்கள் ஆய்வுக்கட்டுரைகள், இவரது படைப்பாகும். கோலார் தங்கவயல் முதல் நிலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார், இப்போது அரசினர் ஆர். சி. கல்லூரியிலும் பணியாற்றி வருகின்றார். குப்பம், திராவிடப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றிய பெருமையும் இவருக்கு உண்டு. எளிய பேச்சு, எளிய எழுத்து இவரது நடை.

© KTBS NOT TO BE REPUBLISHED

அருஞ்சொற்பொருள் :

தொல்-பழைய; பிறழாமை - விலகாமை; கண்ணன்-கிருஷ்ணன்; துரியன் துரியோதனன் ; வீமன் - பீமன்.

பயிற்சி

அ) I. சரியான விடையைத் தெரிவு செய்க :

1. பம்பன் சிறந்ததொரு ______________ .

   அ) மலையாளக் கவிஞன் ஆ) தெலுங்குக் கவிஞன்

   இ) தமிழ்க் கவிஞன் ஈ) கன்னடக் கவிஞன்.

2. ஆதி புராணத்தை இயற்றியவர் ______________ .

   அ)ஒன்னன் ஆ) ரன்னன்

   இ)பம்பன் ஈ) கம்பன்

3. பம்பன் ______________ யின் அவைக்களப் புலவர்.

   அ) அரிகேசரி ஆ) விக்கிரமகேசரி

   இ) ராஜகேசரி ஈ) வீரகேசரி

4. விக்கிரமார்ச்சுன விஜயத்தின் காவியத் தலைவன் __________.

   அ) துரியன் ஆ) தருமன்

   இ) கர்ணன் ஈ) அருச்சுனன்

II. ஒரே வரியில் விடை தருக :

1. உரையிடையிட்ட செய்யுள் என்றால் என்ன?
2. யாரிடம் பம்பன் அவைக்களப் புலவராக விளங்கினான் ?
3. பம்பனது சொந்த ஊர் யாது?
4. ஆதிபுராணத்தின் மூல நூல் யாது ?
5. பம்பன் யாரது பண்பு நலங்களை அருச்சுனனுக்கு ஏற்றிக் கூறுகின்றான் ?
6. பம்ப பாரததிற்குப் பம்பன் இட்ட பெயர் யாது?

@KTBS NOT TO BE REPUBLISHED

III. மூன்று வரிகளில் விடை தருக :

1. பம்பனது பெருமைகளைக் குறிப்பிடுக.
2. பம்பனது இளமைக் காலம் குறித்து எழுதுக.
3. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?
4. பம்பன் ஆதிபுராணத்தைப் படைத்தற்கான நோக்கம் யாது ?
5. பம்ப பாரதத்தின் சிறப்புகள் யாவை ?
6. பம்பனது சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.

IV. ஐந்து வரிகளில் விடை தருக :

1. பம்பன் காலத்தின் சிறப்பினை விளக்குக.
2. ஆதிபுராணத்தின் அடிப்படையைக் குறித்து விளக்குக.
3. கர்ணனது சிறப்பினை விளக்குக.

V. பத்து வரிகளில் விடை தருக :

1. பம்பன் இயற்றிய இரு காவியங்களைக் குறித்து எழுதுக.
2. பாகுபலி வாயிலாகப் பம்பன் கூறும் கருத்துக்கள் யாவை?
3. பாரதத்திலிருந்து விக்கிரமார்ச்சுன விஜயம் எவ்வாறு மாறுபடுகின்றது ?

VI. மொழிப் பயிற்சி :

1. சேர்த்து எழுதுக :

ஆதி + கவி; வழியினன் + ஆன ;
முதல் + படைப்பு ; முன்+ நிலை.

2. பிரித்து எழுதுக :

மும்மணிகள் ; குடிபெயர்ந்து ;
சிறப்புடையது; உடையதோர் ;

3. பிழை திருத்தி எழுதுக :

மூள நூல்
கேலிக்கைகல்
அவணைப் போளவே
சூழ்னிளைக்கேர்ப.

©KTBS NOT TO BE REPUBLISHED

9. தமிழில் விடுகதைகள்

- முனைவர் ச. வே. சுப்பிரமணியன்

(நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் ஒன்றான விடுகதை, தொல்காப்பியர் காலம் தொட்டு இன்றுவரை தமிழில் வழங்கி வருகிறது. சிந்தனையைத் தூண்டும் தமிழ் விடுகதைகள் குறித்த ச. வே. சுப்பிரமணியம் அவர்களின் கருத்துக்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.)

விடுகதைகள் நாட்டுப்புற வாய்மொழி இலக்கிய வகைகளுள் ஒன்று. செவிவழியாகப் பரவுவதே அதன் பண்பாகும். விடுகதை, கேட்போரின் எண்ணத்தைக் கிளரச் செய்து அதன் பொருளை அறிய ஊக்குவிக்கும் சிந்தனைக் கருவியாகும். சிந்தனைக்கு விருந்தாகவும், நகைப்பிற்குக் களமாகவும் விடுகதை இலக்கியம் பயன்படுவதால், அது பாமர மக்களின் விருப்பமான விளையாட்டு என வருணிக்கப்படுவதுண்டு. நகர நாகரிகத்தால் அழிந்து கொண்டிருக்கும் விடுகதை இலக்கியத்தை ஏட்டில் இடம்பெறச் செய்ய வேண்டியது தமிழ் மக்கள் மொழி வளர்ச்சிக்கு ஆற்றும் கடமைகளில் ஒன்றாகும் .

© KTBS NOT TO BE REPUBLISHED

பிசியும் புதிரும் :

தொல்காப்பியர் செய்யுளியலில் ' பிசி ' என்ற சொல்லாட்சி கொண்டு விடுகதை இலக்கியத்தின் இலக்கணக் கூறுகளைக் கூறுகிறார். தொல்காப்பியர் காலத்தில் ' பிசி ' எனப் பயின்று வந்த சொல் காலமாற்றத்தில் ' பிதிர் ' என்றும், பின்னர் ' புதிர் ' எனவும் மாற்றம் பெற்றுள்ளது. ' புதிர் ' என்ற சொல்லாட்சி புரிய முடியாத தன்மையினை உணர்த்துவதற்குப் பயன்பட்ட சொல்லாகக் காட்சியளிக்கின்றது. பேச்சு வழக்கில் இச்சொல், இன்றும் மேற்கூறப்பட்ட பொருளிலேயே பயின்று வருகிறது .

விடுகதை :

விடுகதை கேட்போரின் எண்ணத்தைக் கிளரச் செய்து, அதன் பொருளை அறிய ஊக்குவிக்கும் சிந்தனைக் கருவியாகும். விடுகதை என்பது

விடுவிக்கப்பட வேண்டிய கதை எனச் செயப்பாட்டு வினைத்தொகையாக அமைகிறது .

தமிழ் இதழ்களும் விடுகதைகளும் :

தமிழ்மொழிக்கண் விடுகதைகள் வளர்ச்சியுற்ற காலம் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனலாம். நம்மை ஆண்ட ஆங்கிலேயரின் தொடர்பால் கல்வி நிலைகளில் புதியவற்றை அறிய வாய்ப்பிருந்தது. அவர்களின் வளர்ச்சிநிலை நமக்குப் பாடமாக அமைந்தது, ஆகவே ஐரோப்பிய நாடுகளில் புத்துயிர் பெற்ற ‘ நாட்டுப்புற இயல் கல்வி ’ இந்தியாவிலும் பரவலாகக் காணப்பட்டது. ஆங்கிலேயரே இந்திய நாட்டுப்புற இலக்கியங்களை எழுத்தில் கொணர முயன்றனர். இதனையுணர்ந்த தமிழர்களும் இம்முயற்சியில் ஈடுபட்டனர். ஆங்கிலேயர்களோடு போட்டிபோட்டுக் கொண்டு பதில் முன்னேற்றம் கண்டனர். விடுகதைகள் பரவலாக ஏட்டில் இடம் பெற்ற காலம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாகும். விவேக சிந்தாமணி, கலா சிந்தாமணி, ஜன விநோதினி, செந்தமிழ்ச்செல்வி, கலைமகள், தாமரை, ராணி, அரும்பு, தமிழரசு, கொங்கு போன்ற மாத இதழ்களும், சிறுவர்க்கான இதழ்கள் பலவும் விடுகதை இலக்கியத்தை வளர்த்து வந்துள்ளன .

தமிழ் விடுகதைகளின் இயல்பும் சிறப்பும் :

தமிழில் விடுகதை இலக்கியம் மிக அறுகியே வளர்ந்து வருகின்றது. தமிழில் சென்ற நூற்றாண்டில் தோன்றிய விடுகதைகள் அறிவினைப் புகட்டும் விளக்க விடுகதைகளாகவே காணப்படுகின்றன. அவைகளில் எதுகை, மோனை, இயைபு போன்ற அழகுகள் விரவிக் கிடக்கின்றன. பெரும்பாலான விடுகதைகள் எளிதில் மனதில் பதியும் ஓசைச் சொற்களைக் கொண்டு திகழ்கின்றன. இரண்டடியுடன் கூடிய விடுகதைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. விடுகதைகள் சில வெண்பாவிலும், ஆசிரியப்பாவிலும் அமைந்துள்ளன .

© TBS NOT TO BE REPUBLISHED

மோனை :

தமிழ் விடுகதை இலக்கியத்தில் மோனை அழகுடன் கூடிய விடுகதைகள் பல காணப்படுகின்றன. அடிதோறும் தலையெழுத்தொப்பது மோனை என்ற தொல்காப்பியரின் இலக்கணத்திற்கேற்ப, மோனையிலமைந்த விடுகதை ஒன்றினைக் காண்போம் .

அழகு அழகாய்ப் பூப்பூக்கும்

அம்மாடி என்று காய்காய்க்கும் - அது என்ன ?

(நெருஞ்சி)

எதுகை :

செய்யுளில் அடிதோறும் இரண்டாமெழுத்து இயைந்து வருவது எதுகை எனத் தொல்காப்பியர் இலக்கணம் வகுப்பார் .

விண்ணைச் சிரிக்கச் செய்வாள்

கண்ணைப் பறிக்கச் செய்வாள் - அவள் யார் ?

(மின்னல்)

இயைபு :

அடிதோறும் ஈற்றெழுத்து ஒன்றிவரின் அதனை இயைபு என்பார் தொல்காப்பியர். இங்குத் தமிழில் இயைபு அடிப்படையில் அமைந்த விடுகதை ஒன்றினைக் காண்போம் .

அங்கு மிங்கும் அலைவதிரண்டு

பக்கம் பக்கமாய்ப் பார்ப்பதிரண்டு

கிண்ணொலி தன்னைக் கேட்பதிரண்டு

எட்டியெடுத்துக் கொள்வதிரண்டு – அவை என்ன ?

(கால் - கண் - காது – கை)

@KTBS NOT TO BE REPUBLISHED

எளிமை :

அறிவைச் சோதிப்பதாகவும் குறுகிய எளிய அமைப்புடனும் சில விடுகதைகள் பயின்று வருகின்றன. சந்திரனைக் குறிக்கும் மதி என்ற சொல்லினை விடையாகக் கொண்டு அவ்விடுகதை அமைந்திருக்கின்றது. அது தொடர்பான விடுகதையைக் காண்போம் .

அறிவின் மறுபெயர்

இரவில் வருவது – அது என்ன ? (மதி)

சிந்தனை விருந்து :

விடுகதையின் அடிப்படையான செயல், சிந்தனைக்கு விருந்தளிப்பதே. அந்நிலையில் அவை எவ்வாறு சிந்திக்கத் தூண்டுகின்றன என்பதைக் காண்போம் .

கால் இல்லாத கள்வன்

கால் உள்ளவனைப் பிடித்தான்

தலையில்லாதவன் அதைப் பார்த்து

கலகலவென்று சிரித்தான் - அவர்கள் யார் ?

(பாம்பு - தவளை - நண்டு)

எதிர்மறை அமைப்பு :

சில விடுகதைகள் எதிர்மறையமைப்பில் அமைந்து கிடக்கின்றன. எடுத்துக்காட்டாக வௌவாலை விடையாகக் கொண்ட விடுகதை ஒன்றினைக் காண்போம் .

அந்தரத்தில் பறந்துலவும் பட்சியல்ல

அந்தியப்பால் இரைதேடும் ஆந்தையல்ல

தந்த வரிசை யுமுளது மிருகமல்ல

தன்பேரை இராவுரையார் நெல்லியல்ல

NOT TO BE REPUBLISHED @KTBS

சொந்தமாய்ப் பகலெல்லாம் தலைகீழாகத்

தொய்யலுடன் தொங்குமருந் தவசியல்ல

இந்த வினாவின் விடையை இயம்புவாரே

எனக்கினியர் அவர்க்கினியன் யானாவேனே .

இன்றைய விடுகதையின் போக்கு :

இன்று தோன்றும் விடுகதைகள் பெரும்பாலும் புதிய பொருள்களைச் சிறியோர்க்கு அறிவிக்கும் தன்மை கொண்டு விளங்குகின்றன. விடுகதைகளைக் கொண்டு வட்டார வழக்குகள், மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், காலமாற்றத்தின் சாயல்கள் ஆகியவற்றினை அறிய முடியும்.இன்று தமிழ் மொழியில் விடுகதைகளை உருவாக்குகிறவர்கள் பெண்களும், சிறுவர்களுமே ஆவர். அவர்களது பொழுது போக்கு முயற்சியால் இன்று இவை வளர்ச்சி பெற்று வருகின்றன. தற்காலத்தில் தோன்றும் விடுகதைகள் பெரும்பாலும் சின்னஞ்சிறு வடிவோடு பொருள் விளக்கம் கூறும் அடிப்படையில் அமைந்துள்ளன .

ஆசிரியர் குறிப்பு :

பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியம் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். தமிழ்த்துறைத் தலைவராகவும், உலாத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றியவர். பணி நிறைவான பின்பு குற்றாலம் அருகில் ‘ தமிழூர் ’ என்ற ஒன்றைத் தோற்றுவித்து தமிழ்பணிகளைத் தொடர்கிறார். தமிழில் இதுவரை 101 நூல்களையும், ஆங்கிலத்தில் 5 நூல்களையும் எழுதியுள்ளார். மலையாளத்தில் சிலப்பதிகாரத்தின் வஞ்சிக்காண்டத்தை மொழிபெயர்த்துள்ளார். தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். 14 விருதுகளைப் பெற்றுள்ளார், இக்கட்டுரை இவருடைய ‘ தமிழ் விடுகதைக் களஞ்சியம் ’ என்ற நூலில் அமைந்துள்ளது .

© KTBS NOT TO BE REPUBLISHED

அருஞ்சொற் பொருள் :

செவி - காது , களம் - இடம் , ஏட்டில் - புத்தகத்தில் , பிசி – விடுகதை, தவசி - தவம் செய்யும் முனிவர், பயின்று வந்த - வழங்கிவந்த , நகைப்பிற்கு – சிரிப்பிற்கு , பரவலாக - பெரும்பாலும் , அருகி – குறைந்து , இயைந்து – பொருந்தி , விண் - வானம், ஈற்று எழுத்து – கடைசி எழுத்து , பட்சி – பறவை, அந்தியப்பால் - அந்திக்கு அப்பால், இரா - இரவு .

பயிற்சி

அ) I. கோடிட்ட இடங்களை நிரப்புக ;

1. பாமர மக்களின் விருப்பமான விளையாட்டு _______ ஆகும் .
2. தொல்காப்பியர் விடுகதையை _______ என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் .
3. விடுகதைகள் பரவலாக ஏட்டில் இடம்பெற்ற காலம் _______ ஆகும் .
4. செய்யுளில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது ________ ஆகும் .
5. விடுகதையின் அடிப்படையான செயல் _______ விருந்தளிப்பதே ஆகும் .

II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. தமிழ் மக்கள் மொழி வளர்ச்சிக்கு ஆற்றும் கடமைகளில் ஒன்றினைக் குறிப்பிடுக?
2. புதிர் என்றால் என்ன ?
3. மோனை நயத்துடன் கூடிய விடுகதை ஒன்றை எழுதுக ?
4. விடுகதைகளைக் கொண்டு எவற்றை அறிய முடியும் ?

@KTBS NOT TO BE REPUBLISHED

III. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக ;

1. ‘ பிசி ’, ‘ புதிர் ’ ஆகிய சொற்களை விளக்குக .
2. விடுகதை என்பதை விளக்குக .
3. தமிழ் விடுகதைகளை வெளியிட்டு ஊக்குவித்த இதழ்கள் நான்கினைக் குறிப்பிடுக .
4. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினை விளக்குக .

IV. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக ;

1. தமிழ் விடுகதைகளின் இயல்பும் சிறப்பும் குறித்து பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியம் கூறுவனவற்றைச் சுருக்கி வரைக .
2. இன்றைய சிறுகதைகளின் போக்கு குறித்து பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியம் கூறுவன யாவை ?

V. பத்து வரிகளில் விடை தருக ;

1. தமிழ் இதழ்களும் விடுகதைகளும் குறித்து பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியம் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக ?

ஆ. மொழிப் பயிற்சி

1. சேர்த்து எழுதுக ;

அ) இரண்டு + அடி , ஆ) காட்சி + அளிக்கின்றது ,

இ) இரண்டாம் + எழுத்து , ஈ) கொள்வது + இரண்டு .

2. பிரித்து எழுதுக :

அ) காலூன்றியுள்ளது , ஆ) இதனையுணர்ந்து ,

இ) தங்களுக்குள்ளும் , ஈ) மோனையிலமைந்த

3. கீழ்வரும் விடுகதைகளுக்கு விடை காண்க ;

@KTBS NOT TO BE REPUBLISHED

அ. அங்கமுத்து வாசலிலே

தொங்கு முத்து ஆடுது

அதையெடுத்து வாயில் போட்டால்

திக்கு முக்காடுது – அது என்ன ?

ஆ. அண்ணன் வீட்டுக்குத் தம்பி போகலாம்

தம்பி வீட்டுக்கு அண்ணன் போக முடியாது - அது என்ன ?

இ. விடிய விடிய பூந்தோட்டம்

விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம் - அது என்ன ?

ஈ. வெளுக்காத போர்வை

வெண்மையாக இருக்கும்

நிரப்பாத குடம்

நிறைந்தே இருக்கும் - அது என்ன ?

உ. வளைந்து நெளிந்து ஓடி வரும் பாம்பு அல்ல

தாவித்தாவி குதித்து வரும் குரங்கு அல்ல

ஓயாது இரைந்திடும் வண்டு அல்ல - அது என்ன ?

ஊ. வந்த பிற்பாடு வந்தீர்களே

வந்துவிட்டு ஒருதரம் போனீர்களே

போய்விட்டு ஒருதடவை வந்தீர்களே

இனிமேல் போனால் வருவீர்களா ? - யார் அவர்கள் ?

எ. மண்ணுக்குள் பிறந்தாண்டி

மாபெருந் தோலாண்டி

கண்ணீரைத் தருவாண்டி – அது யாரடி ?

NOT TO BE REPUBLISHED @KTBS

ஏ. மானாமதுரைக்குப் போன மச்சான்

1) மாவிலே பூத்தது வாங்கி வாரும்

மாவிலே பூத்தது இல்லாவிட்டால்

2) பக்கம் பழுத்தது வாங்கிவாரும்

பக்கம் பழுத்தது இல்லாவிட்டால்

3) ஒக்கச் சிரிப்பது வாங்கி வாரும்

4) ஒக்கச் சிரிப்பது இல்லாவிட்டால்

படுத்து உறங்க வாங்கி வாரும் - அது என்ன ?

ஐ. வட்ட வடிவாள் வரவரத் தேய்வாள்

முற்றும் மறைவாள்

மூன்றாம் நாள் முளைப்பாள் - அவள் யார் ?

ஒ. நீரில்லா குளத்திலே

நீண்ட கொடி ஒன்று

வாடாது வதங்காது

பூக்காது காய்க்காது – அது என்ன ?

ஓ. மாட மாளிகையில் வசிப்பான்

மன்னன் அல்ல

கூட கோபுரத்தில் இருப்பான்

கடவுள் அல்ல - அவன் யார் ?

ஔ. பட்டணத்து ஆலமரம்

வெட்ட வெட்ட துளுக்குது ? – அது என்ன ?

@KTBS NOT TO BE REPUBLISHED

விடைகள் :

அ. மிளகாய் , ஆ. உழக்கு நாழி , இ) விண்மீன்கள் , ஈ) தேங்காய், உ. கடல் அலை , ஊ. பற்கள் , எ. வெங்காயம் , ஏ. 1) பணியாரம், 2) பவளம் , 3) கண்ணாடி, 4) பாய் , ஐ. நிலா , ஒ. கைரேகை , ஓ. புறா , ஔ. தலைமயிர் .

4. மாணவர்கள் ஒவ்வொருவரும் விடுகதைகளைச் சேகரித்து வந்து ஆசிரியரின் உதவியுடன் இரு குழுக்களாகப் பிரிந்து, விடுகதைப் போட்டி நடத்தி மகிழ்க .

@KTBS
NOT TO BE REPUBLISHED

10. கண்ணகி கோயில் செய்த சேரன் செங்குட்டுவன்

V8J5M5

(நாடகம்)

- புலவர் கு. திருமேனி

(மதுரையை எரித்த கண்ணகி, சேர நாட்டிற்கு வந்து தன் கணவன் கோவலனுடன் விண்ணுலகம் சென்றாள். இக்காட்சியைக் கண்ட குறவர்கள், மலைவளம் காணவந்த சேரன் செங்குட்டுவனிடம் இச்செய்தியை வியந்து கூறினர். கண்ணகியின் கதையைச் சாத்தனார் என்ற புலவர் மூலம் கேட்டு சேரன் செங்குட்டுவன் வியப்புற்றான். மறுநாள் அவைக்களத்திலே கண்ணகிக்குக் கோயில் கட்ட செங்குட்டுவன் முடிவு செய்கிறான். அப்போது கனகன், விசயன் என்ற ஆரிய மன்னர்கள் சோழனையும், பாண்டியனையும் இகழ்ந்த செய்தியை அமைச்சர் வில்லவன் கோதை செங்குட்டுவனிடம் கூறினார். வெகுண்டு எழுந்த செங்குட்டுவன், பத்தினி தெய்வம் கண்ணகிக்குச் சிலை வடிக்க ஒரு கல்லை அந்த வடவரசர் முடித்தலையில் ஏற்றி வருவேன் என்று சூளுரைத்தான். அவ்வாறே படையெடுத்துச் சென்று கனகனையும் விசயனையும் வென்றான். அவர்கள் தலையில் கல்லைச் சுமக்கச் செய்து கங்கையாற்றில் அக்கல்லை நீர்ப்படை செய்து, கண்ணகிக்குக் கோயில் கட்டினான். இச்செய்தி நாடக வடிவில் இங்கு இடம் பெறுகிறது .)

©KTBS NOT TO BE REPUBLISHED

காட்சி – 1

பாத்திரங்கள் : சேரன் செங்குட்டுவன், பெருங்கணி, வில்லவன் கோதை, ஆசான் அவையோர் .

அவையோர் : வாழி அரசே ! வாழ்க நின் கொற்றம் ! சேர வேந்தே! வாழி ! வாழி !

செங்குட்டுவன் : அவையோரே ! நேற்று நம் மலை அடைந்து விண் புகுந்தாள் கண்ணகி. ஏன் நம் மலையில் வந்து விண்புக வேண்டும் ? நினைக்க நினைக்க மனம் குழம்புகின்றது .

பெருங்கணி : வாழ்க வேந்தே ! வாழ்க நின் கொற்றம் ! பத்தினி போந்தது நாம் பரவுவதற்கே ! பாரதம் அடங்கலும், பணிவித்த நீயும்

பணிந்து வழிபடவே இங்கு வந்துள்ளாள். எவர்க்கும் கிட்டாத வாய்ப்பு! ஏற்றுக் கொள்ளுங்கள். இனி பேரும் புகழும் வீரமும் வெற்றியும் கோடி கோடி நந்தும். கோயில் எடுத்தற் கேற்ப கல் பொதியத்தும் உண்டு, இமயத்தும் உண்டு. கடவுள் தன்மை கங்கை படுப்பினும் காவிரி படுப்பினும் அமையும் .

செங்குட்டுவன் : பெருங்கணி ! வாளொடு பிறந்த எங்குடிக்கு வளமார் பொதியத்தில் கல்லெடுத்துக் காவிரிபடுத்தல் ஏற்றதன்று. இமயமே சாலச் சிறந்தது. என் நாடு புகுந்த பத்தினிக்குச் சிலை வடிக்க இமய வேந்தன் ஒரு கல் தாரானாயின், ஆ ! இறந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சி, வடதிசை நின்று எதிரூன்றிய காஞ்சி, அம்மட்டோ ! காஞ்சியனைத்தும் புலனாகி வடபுலம் நடுங்கக் காண்பேன் ! ஆ ! அமைச்சரே ! இன்று காலை இமயத்திலிருந்து மீண்ட தாபதர் சிலர் சொன்ன சிறுசொல்லை இந்த அவையறியக் கூறுங்கள் !

வில்லவன் கோதை : வாழ்க வேந்தே ! அமைச்சர் பெருமக்களே ! பெருங்கணிகனே ! எண் பேராயமே ! அறங்கூறு அவையே ! வடவர் உரைத்தது வாய் கடந்தது வசை பொதிந்தது. கனகன், விசயன் என்ற ஆரிய மன்னரிருவர், " தங்கள் முன்னோர் சேர்ந்த காலத்துத் தமிழ் நாட்டரசர்கள் சூழ்ச்சியாக வந்து இமயத்தில் புலியையும் கயலையும் பொறித்துச் சென்றனர். இப்போது ஆண்மையிருந்தால் வரட்டும், ஆற்றலிருந்தால் பொரட்டும்; வந்தால் தக்க வழிகாட்டிப் போக்கலாம் " என்றார்களாம் : நகைத்தார்களாம், ஒரு திருமணக் கூட்டத்தில் .

செங்குட்டுவன் : அவையோரே ! அந்தச் சொல்லைப் பொருட்படுத்தாதொழிந்தால் கங்கை வளம் காழ் கொள்ளும், பொருநை வளம் புரைபடும்; பொன்னி வளம் பொன்றும், பொய்க்கும் எம் வளமார் வையை வளம் !

மறக்குடி மக்களே ! இம்மாசு துடைக்காது போனால் மானமோ, மாட்சியோ நமக்கு இல்லை. இதோ, என் கைவாள் ! பரம்பரை வாள் ! வெற்றி வாள் ! வீர வாள் ! இதன் மேல் ஆணை ! எம் பத்தினித் தெய்வம் வடிக்க ஒரு கல்லை அந்த வடவரசர் முடித்தலை ஏற்றிக் கொண்டு வாராது வறிது மீள்வேனேல் என்னை நீங்கள், பகை கண்டு அஞ்சிப் படை கண்டு நடுங்கும் பேதை என்றோ வளங்கொண்ட நாட்டை ஆளும் வலியற்ற கோழை என்றோ அழையுங்கள் !

©KTBS NOT TO BE REPUBLISHED

ஆசான் : (எழுந்து) அரசே ! இமயவரம்பா ! ஏனிந்த சீற்றம் ? வடபுலத்தரசர் இகழ்ந்தது ஆர்புனைச் சோழனையும் வேம்பு சூடும் பாண்டியனையுமே அல்லாது, போந்தை புனைந்த தங்களையன்று! தங்கள் பெருமை கண்டஞ்சித் தங்களைச் சுட்டாது விலக்கிய போது அஞ்சினார்க்களிக்கும் வெஞ்சினம் இல்லோய் ! தணிக நின் சீற்றம் ! தவிர்க்க இவ்வஞ்சினம் !

செங்குட்டுவன் : அவையோரே ! நாம் தென்னாட்டுத் தமிழ் மக்கள் என்றுமுள தென் தமிழை இயம்பி இசை பூண்டவர். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துத் தோன்றிய பழங்குடிகளுள் பாண்டியரும் சோழரும் விலக்கோ ? வீரத்திலோ, நாட்டு வளத்திலோ, போர்ப்பண்பாட்டிலோ யாரில் யார் தாழ்ந்தோர் ? கனகனும் விசயனும் இகழ்ந்தது தமிழ் வேந்தரை ; அது என்னையுந்தான். அவர் காதில் இது விழுந்தால் இதுகாறும் வடபுலம் வேகும். வடவர் சாம்புவர். என் செவியகம் வெதும்பும். இப்பழி துடைத்தே தீருவேன். தடுத்தல் வேண்டாம் .

காட்சி – 2

போர்க் களம்

(படையிரண்டும் வீறுடன் பொருகின்றன. மலைமேல் நின்று போரைக் காண்போர் பேசிக் கொள்கின்றனர்)

ஒருவன் : அதோ ஒருவன் பெரும்படை சூழ கூற்றுவன் போல் விரைகின்றானே !

மற்றவர் : ஆம் அவன் தான் சேரன் செங்குட்டுவன் .

ஒருவர் : ஐயா ! கண் பார்க்கக் கூசுகின்றதே ? இவன் சினத்தில் பிழைப்பாருண்டோ ?

ஒருவர் : அதோ கனகன் படை ! அதன்பின் விசயன் ! உம் . . . . ! இப்போழுது பாரும் இவன் சினத்தை !

மற்றவர் : அந்த யானைகள் வீரர்களைத் தூக்கி எறிந்து மார்புழுகின்றதைப் பாரும் ! கொடுமை ! கொடுமை ! இப்படிச் செய்ய எங்கேதான் அவை கற்றுக் கொண்டனவோ !

ஒருவர் : அதோ பார், ஒரே வெட்டு. தொலைந்தது அந்தக் களிறு !

©KTBS NOT TO BE REPUBLISHED

ஒருவர் : ஐயையோ ! குருதி ஆறாக ஓடுகிறதே !

மற்றொருவர் : ஆறு சும்மா ஓடவில்லை - யானைகளோடு எல்லாப் பிணத்தையும் அடித்துக் கொண்டோடுவதைப் பார் !

ஒருவர் : என்னய்யா ? போர்க்களத்தின் ஒன்றையும் காணோம் களம் எல்லாம் குளம் போல் குருதி உறைந்து கிடக்கிறது !

மற்றவர் : போரிட்ட கனகன் எங்கே ? விசயன் எங்கே ?

ஒருவன் : இறந்து போயிருப்பார்கள் .

மற்றவர் : இல்லை இல்லை, இதோ கனகனும், விசயனும் வருகின்றார்களே !

ஒருவர் : ஆமாம், அவர்களைச் சுற்றிப் பல அரசர்களும் வருகின்றனரே!

மற்றவர் : உம், இப்போது பாருங்கள் ஐயா ; குட்டுவனை ! யானைக் கூட்டத்தில் சிங்க ஏறு போல் பாய்கின்றான் .

ஒருவர் : தொலைந்தான் குட்டுவன் !

மற்றவன் : இல்லை, தொலைந்தனர் இக்கனக விசயர்கள் !

ஒருவர் : ஓகோ ! கனகனும் விசயனும் தமிழ் வேந்தர்களை அன்று இகழ்ந்ததற்குத் தக்க தண்டனை கிடைத்தது போலும் !

(போரில் செங்குட்டுவன் வெற்றி பெறுகிறான். வில்லவன் கோதையைப் பகைவருடன் இமயத்திற்கு அனுப்புதல்)

செங்குட்டுவன் : வில்லவா, நீ செய்த இப்போர் பாராட்டிற்குரியது ! நீ தலைமை தாங்கி நம் படையோடு சென்று ஒரு கல் தேர்ந்தெடுத்து இப்பகைவர் தலையில் ஏற்றி வா !

வில்லவன் : ஆணை அப்படியே ஆகட்டும் .

(கல்லெடுத்து மீண்டு வருகிறான் வில்லவன் கோதை)

செங்குட்டுவன் : தூக்குங்கள் கல்லை - தென் தமிழ் இகழ்ந்த கனகா ! தமிழ் மறம் பழித்த விசயா ! எம் தமிழ்ப்பாவையைச் சுமந்து செல்லுங்கள் ! இதுவே உம் வாய்த்துடுக்கிற்கு ஏற்றதோர் ஒறுப்பு ; வடவர் இனியாவது தமிழகம் பழித்தல் ஒழியட்டும் .

© KTBS NOT TO BE REPUBLISHED

காட்சி – 3

(கண்ணகி கோயில் கட்டப்பட்டதும் செங்குட்டுவன் தானை சூழ அங்கு வந்து கம்மியர்களுக்குப் பரிசு வழங்குதல்)

பொதுமக்கள் : வருக எங்கோ ! வாழ்க எங்கோ ! வாழ்க ! சேரன் ! வாழ்க வையம் !

செங்குட்டுவன் : அமைச்சரே ! கோயிலுக்குள் நுழையும் போதே ஒரு வகை மெய்ப்பாடு தோன்றுகிறதே ! (கோயில் கண்டு வியத்தல்)

என்ன ! இக்கோயில் கருங்கல்லால் ஆனதா ! மரத்தாலானதா ! மண்கொண்டியற்றியதா ?அன்றிப் பொன் கொண்டியற்றியதா ? என்ன நுட்பம்? என்ன கைத்திறம? மரத்தின் நெளிவையும் வளைவையும் எப்படி இக்கல்லில் ஏற்றினீர் ? (கண்ணகி சிலையைக் கண்டு) ஓ ! கண்ணகி தெய்வத்தைக் கல்லில் வடித்ததென்று யாரும் கூறார். நிற்பது கண்ணகியேயென்று காண்போர் மருளும் வண்ணம் இயற்றிய உங்கட்கு ஆயிரங்காணி மானியம் விட்டேன் .

பொது மக்கள் : வாழ்க தமிழ் ! ஓங்குக கண்ணகி புகழ் !

நூல் குறிப்பு :

"கண்ணகி கோயில் செய்த சேரன் செங்குட்டுவன் " என்ற தலைப்பில் அமைந்துள்ள இந்நாடகப் பகுதி " நாடகச் சிலம்பு " என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது. இதன் ஆசிரியர் புலவர் கு. திருமேனி ஆவர். இந்நாடகம் இளங்கோவடிகள் செய்த சிலப்பதிகாரக் காப்பியத்தை நாடக வடிவில் தருவதாகும். " சிலம்பணி மகளிர் " என்ற இவரது மற்றொரு நூல் இவருக்குச் சிலப்பதிகாரத்தில் உள்ள ஈடுபாட்டினை எடுத்துரைக்கிறது. இவர் திருச்சியில் உள்ள தேசியக் கல்லூரியில் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர் .

NOT TO BE REPUBLISHED @KTBS

அருஞ்சொற் பொருள் :

நீர்ப்படை – சிலை வடிக்க இருக்கும் கல்லைப் புனித நீரில் நீராட்டுதல் , பெருங்கணி - அரசவை சோதிடர் , விண் – விண்ணுலகம் , போந்தது – சென்றது , பாரகம் - உலகம் , நந்தும் - பெருகும் , பொதியத்தும் - பொதியமலையிலும் , கங்கைப் படுப்பினும் - கங்கை நீர்நிலையில் நீராட்டினாலும் , வளமார் - வளமிக்க , சால - மிகவும் , வடதிசை நின்று எதிரூன்றி காஞ்சி - வடநாட்டு வேந்தர்களை எதிர்த்து நின்று வெற்றி பெற்ற காஞ்சி , தாபதர் - தவம் செய்பவர் , பொரட்டும் - போர் செய்யட்டும் , காழ் கொள்ளும் - பாழ்படும் , புரைபடும் - கரைபடும் ,பொன்றும் - குறையும் , மாசு – குற்றம், மாட்சி- பெருமை , மீள்தல் - மீண்டு வருதல் , வலியற்ற - வலிமையற்ற , சீற்றம் - கோபம் , ஆர்புனைச் சோழன் - ஆத்தி மாலை சூடும் சோழன் , வேம்பு சூடும் பாண்டியன் - வேப்பமாலையைச் சூடும் பாண்டியன் , போந்தை புனைந்த தங்களை (சேரனை) - பனம்பூ மாலை சூடும் சேரன் , அஞ்சினார்க்களிக்கும் - பயந்தவாகளுக்கு இரக்கப்படும் , வெஞ்சினம் இல்லோய் - கடுமையான கோபம் இல்லாதவனே , செவியகம் - செவியும்,மனமும் , கூற்றுவன் - எமன் , விரைகிறானே - விரைந்து வருகிறானே , களிறு – ஆண் யானை , குருதி – இரத்தம் , சிங்க ஏறு – ஆண் சிங்கம் , பாவை - பெண் , வாய்த்துடுக்கு - வாய்த்திமிர் , ஒறுப்பு - தண்டனை , கம்மியர் - சிலை வடிப்பவர் , மருளும் - பயம் கொள்ளுதலும் , இதுகாறும் - இதுவரை , சாம்புவர் - துன்பப்படுவர் , ஆயிரங்கணி - நிலத்தின் அளவு , மானியம் - நிதி உதவி .

பயிற்சி

அ) I. கோடிட்ட இடத்தைத் தகுந்த சொற்களால் நிரப்புக ;

1. __________ புகுந்தது நாம் பரவுவதற்கே .
2. சேரன் செங்குட்டுவனின் படைத்தளபதி ________ ஆவார் .
3. மறக்குடி மக்களே ! இம்மாசு துடைக்காது போனால் _______ ______ நமக்கு இல்லை .

@KTBS NOT TO BE REPUBLISHED

II. ஒரு வாக்கியத்தில் விடை தருக :

1. கண்ணகி எவருடைய மலையை அடைந்து விண்புகுந்தாள் ?
2. செங்குட்டுவன் பத்தினிக்குச் சிலை வடிப்பதற்கு எம்மலையில் கல் எடுக்க விரும்பினான் ?
3. தமிழர்களைப் பழித்த வடவரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
4. போர்க்களத்தில் யானைக் கூட்டத்தில் சிங்க ஏறு போல் பாய்ந்தவன் யார் ?

III. இரண்டு வாக்கியங்களில் விடை எழுதுக :

1. ஆரிய மன்னர்கள் தமிழ் நாட்டரசர்களை எவ்வாறு பழித்தனர் ?
2. செங்குட்டுவன் ஆரிய மன்னர்கள் கூறிய பழிச் சொல்லைப் பொருட்படுத்தவில்லை என்றால் என்ன நிகழும் என்று கூறினான்?
3. சூளுரைத்த செங்குட்டுவனை நோக்கி ஆசான் யாது கூறினார் ?

© KTBS NOT TO BE REPUBLISHED

IV. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக :

1. மனக்குழப்பத்தில் இருந்த சேரனுக்கு பெருங்கணி உரைத்தது யாது?
2. தமிழ் நாட்டரசர்களைப் பழித்த ஆரிய மன்னர்களுக்கு எதிராகச் செங்குட்டுவன் உரைத்த சூளுரையினைக் கூறுக ?
3. வஞ்சினம் தடுத்த ஆசானை நோக்கிச் செங்குட்டுவன் கூறியது யாது ?

V. பத்து வாக்கியங்களில் விடை எழுதுக :

1. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விவரி ?

VI. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக :

1. வடவர் உரைத்தது வாய் கடந்தது ; வசை பொதிந்தது .
2. வீரத்திலோ, நாட்டு வளத்திலோ, போர்ப் பண்பாட்டிலோ யாரில் யார் தாழ்ந்தோர் .
3. தணிக நின் சீற்றம் ; தவிர்க இவ்வஞ்சினம் .
4. எம் தமிழ்ப்பாவையைச் சுமந்து செல்லுங்கள் .
5. வடவர் இனியாவது தமிழகம் பழித்தல் ஒழியட்டும் .

ஆ. மொழிப்பயிற்சி

சேர்த்தெழுதுக :

1. எடுத்தற்கு + ஏற்ற
2. தாரான் + ஆயின்
3. மன்னர் + இருவர்
4. பொருட்படுத்தாது + ஒழிந்தால்
5. அஞ்சினார்க்கு + அளிக்கும்
6. ஆயிரம் + காணி

பிரித்தெழுதுக :

1. ஏற்றதன்று
2. காஞ்சியனைத்தும்
3. எதிரூன்றிய

@KTBS
NOT TO BE REPUBLISHED

4. ஆற்றலிருந்தால்

5. தங்களையன்று

6. தமிழ்ப்பாவை .

இ. செய்முறைப் பயிற்சி ;

1. இந்நாடகத்தை உணர்ச்சிப் பெருக்குடன் நடித்துக் காட்டுக .

@KTBS
NOT TO BE REPUBLISHED

இலக்கணம் 3. அணி இலக்கணம்

செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடப்புனைவது அணியாகும், இது சொல்லணி, பொருளணி என இருவகைப்படும் .

1. சொல்லணி

சொல்லணி - சிலேடை, திரிபு, மடக்கு எனப் பலவகைப்படும். சிலேடையணியை முந்தைய வகுப்புகளில் பயின்றுள்ளீர்கள். எனவே பொருளணியில் சிலவற்றைக் காணலாம் .

2. பொருளணி

பாட்டின் பொருள் சிறக்குமாறு அமைத்துப் பாடப்படுபவை பொருளணி ஆகும். அவற்றுள் வேற்றுமை அணி, தற்குறிப்பேற்ற அணி, பிறிது மொழிதல் அணி, வேற்றுப்பொருள் வைப்பு அணி என்னும் அணிகளின் இலக்கணத்தைக் காண்போம் .

அ. வேற்றுமை அணி :- வெளிப்படையாகவேனும் குறிப்பாகவேனும் இருபொருள்களுக்கிடையே அமைந்த ஒப்புமையைப் புலப்படுத்தும் வண்ணம் இரண்டையும் ஒன்றாகக் காட்டிப் பின் அவ்விரண்டிற்கும் உள்ள வேற்றுமையைக் கூறுவது வேற்றுமை அணி ஆகும் .

(எ-டு) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு . (திருக்குறள்:129)

தீயின் கொழுந்தும் சுடும், நாவினால் கூறிய சொல்லும் சுடும், இரண்டிற்கும் இடையே அமைந்த ஒத்த செயல் சுடுவது. ஆனால் தீயினால் சுட்டபுண் ஆறுவதும் நாவினால் சுட்டபுண் வடுவாகி ஆறாமல் நிற்பதும் வேறுபாடு. இவ்வாறு ஒத்த நிலையைக் காட்டிப்பின் வேறுபாட்டினைப் புலப்படுத்துவது வேற்றுமை அணியாகும் .

ஆ. தற்குறிப்பேற்ற அணி :- இயற்கையாக நடக்கின்ற நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன்னுடைய எண்ணத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும் .

(எ-டு) " போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி

வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட "

(சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்த காதை 189-90)

© KTBS NOT TO BE REPUBLISHED

பொருள் : கோவலனும் கண்ணகியும் மதுரை நகருக்குச் செல்லும் பொழுது பாண்டிய மன்னனின் அரண்மனை மதிலின்மேல் இருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால் இளங்கோவடிகள் கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் என்பதை முன் கூட்டியே தெரிந்த கொடிகள் தம் கையை அசைத்து இம் மதுரை நகருக்குள் வரவேண்டாம் என்று தெரிவிப்பதைப் போல் காற்றில் அசைந்ததாகக் கூறினார். அதாவது இயற்கையாக நடக்கின்ற நிகழ்ச்சியின் மீது ஏற்றிக் கூறி இருக்கிறார். எனவே இது தற்குறிப்பேற்ற அணி ஆகும் .

இ. பிறிது மொழிதல் அணி :- கவிஞன் தான் சொல்லக் கருதிய பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்துவதற்காக அதனோடு ஒத்த பிறிதொன்றினைச் சொல்வது பிறிது மொழிதல் அணி ஆகும்.(உவமையை மட்டும் கூறி அதன் மூலம் பொருளை அறியச் செய்வது பிறிது மொழிதலணி)

(எ-டு) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் . (திருக்குறள்: 475)

ஒட்டணி, உவமப் போலி, நுவலா நுவற்சி என இவ்வணிக்கு வேறு பெயர்களும் உள்ளன .

மெலியராயினும் பலரோடு பகைமை கொண்டால் அது தன் உயிருக்குத் துன்பம் விளைவிக்கும் என்ற கருத்தை வெளிப்படையாகக் கூறாமல் மறைத்து, மயில் தோகை மெல்லிதாயினும் (நொய்தாயினும்) அளவுக்கு அதிகமாக ஏற்றினால் வண்டி அச்சு முறியும் என்ற கருத்தின் மூலம் விளக்குவதால் இது பிறிது மொழிதல் அணி ஆகும் .

ஈ. வேற்றுப்பொருள் வைப்பணி :- முன் ஒன்றைக்கூறத்தொடங்கி அது முடித்தற்கு உலகத்தார் அனைவரும் அறிந்த தன்மையுடைய வேறொரு பொருளை வைத்து முடிப்பது வேற்றுப்பொருள் வைப்பு அணி ஆகும் . (பொதுப்பொருளால் சிறப்புப் பொருளை முடிப்பது)

(எ-டு) உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறை செய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும் . (பழமொழி நானூறு)

@KTBS NOT TO BE REPUBLISHED

தன்னிடம் நீதி கேட்க வந்த பெரியோர்களின் ஐயம் நீங்கும் வண்ணம் இளையவனாக கரிகால் சோழன் நரை முடி முதியவனாய் வேடம் பூண்டு நீதி வழங்கினான். அரசகுலத்திற்குரிய நீதி வழங்கும் திறன் கல்லாமலேயே இவனிடம் இயல்பாக அமைந்திருந்தது என்பதனைக் குலவிச்சை கல்லாமல் பாகம் படும் என்ற பொதுவான கருத்தின் மேல் முடித்திருப்பதால் இது வேற்றுப் பொருள் வைப்பு அணியாகும் .

உ. பின்வருநிலை அணி :

சொல்லோ, பொருளோ, மீண்டும் மீண்டும் அடுக்கி வந்து பொருள் தருதல் பின்வரு நிலை அணி எனப்படும்.

(எ.டு) பற்றுக பற்று அற்றான் பற்றினை பற்றுக
அப்பற்றைப் பற்று விடற்கு.

பற்றுதல் என்னும் சொல்லும் பொருளும் மீண்டும் மீண்டும் அடுக்கி வந்து பொருள் தருகின்றது.

NOT TO BE REPUBLISHED @KTBS

4. பொருளிலக்கணம்

தமிழில் பொருளிலக்கணம் அகம் புறம் என்ற இருவகைப்படும். இதனை அகத்திணை, புறத்திணை என்று இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுவர். இவற்றுள் அகத்திணையைப் பற்றி முந்தைய வகுப்புகளில் பயின்று வந்துள்ளீர்கள். இப்பொழுது புறத்திணையைக் காண்போம் .

புறமானது போர், வீரம், வெற்றி, கல்வி, பொருள், அரசியல் முதலானவற்றை அனைவராலும் அனுபவிக்கப் பெறுவதும் அவற்றைப் பிறர்க்கு எடுத்துச் சொல்வதுமாகிய ஒழுக்கம். அதில் சிறப்புடையது போர் முறை, அதன் அடிப்படையில் தொல்காப்பியர் புறத்திணையை முறையே ஏழு வகைப் படுத்துவர் .

1. **வெட்சி –** பகை நாட்டின் பசுக்களைக் கவர்தல் .
2. **வஞ்சி -** மண்ணாசை கொண்டு வேந்தனை வெல்லக்கருதி போர் மேற்கொள்ளுதல் .
3. **உழிஞை -** பகைவரின் மதிலை முற்றுகையிட்டு வெற்றி கொள்ளுதல் .
4. *காஞ்சி - போர்தொடுக்க வந்தவனை எதிர்கொள்ளுதல்: நிலையாமை.*

5. **தும்பை** - வலிமையால் போர்தொடுத்த வேந்தனை எதிர்த்து வெற்றி கொள்ளுதல் .

6. **வாகை** - குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல்

7. **பாடாண்** – வெற்றி பெற்றவனின் வீரம், நற்பண்பு முதலானவற்றைப் புகழ்ந்து வாழ்த்துதல் .

பிற்காலத்தில் ஐயனாரிதனாரால் எழுதப்பட்ட புறப்பொருள் வெண்பா மாலையில் புறத்திணை பன்னிரண்டாக வகுக்கப் பட்டுள்ளது, அவை மேற்கூறிய ஏழுதிணைகளோடு வெட்சித்திணையின் ஒரு துறையான கரந்தையை ஒரு திணையாகவும், உழிஞைத் திணையின் ஒரு துறையான நொச்சியை ஒரு திணையாகவும், இவற்றுள் அடங்காத பொதுவான செய்திகளைக் கூறுவதற்காகப் பொதுவியல் என்ற ஒரு திணையையும்,கைக்கிளை, பெருந்திணை என்ற இரண்டையும் சேர்த்து புறத்திணைகள் மொத்தம் பன்னிரண்டு என வகைப்படுத்தினார்; எனினும் முதல் பத்து திணைகளே பெரும்பாலும் வழக்கத்தில் உள்ளன.

@KTBS
NOT TO BE REPUBLISHED

@KTBS
NOT TO BE REPUBLISHED